நாட்டுக் கூத்து வரிசை 002

# குருமணி யோசவ் வாஸ்



JPL
C6932

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம்தசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

KOHA JPL

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

# குருமணி

## யோசவ் வாஸ்

நாட்டுக்கூத்து

6932 CC

155308

155308 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
398.2

# குருமணி யோசவ்வாஸ்

## நாட்டுக்கூத்து

## அரங்கேற்றம்

இந்நூல் பாஷையூர் புலவர் முத்தாரக் கவிஞர் ஆ. செகராசசிங்கம் அவர்களால், பாஷையூர் கட்டளைக் குரவராக இருந்த அருள்திரு பிரான்சீஸ் அடிகளாரின் வேண்டுகோளின் பேரில் பாடப்பட்டு - 1988 ஆம் ஆண்டு ஆனி மாதம் 16 ஆம் நாள் யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை, புலவர் அருள்திரு நீ. ம. சவிரிமுத்து அடிகள், பாஷையூர் கட்டளைக் குரவர் அருள்திரு பிரான்சீஸ் அடிகள், யாழ். மரியன்னை பேராலய கட்டளைக் குரவர் எச். ஜெபநேசன் அடிகள் முன்னிலையில் இந்நாடகம் அரங்கேற்றப்பட்டது. இந்நாடகத்தின் இசையமைப்பு, நெறியாள்கை என்பன ஆசிரியர் சவிரிமுத்து ஏபிரகாம் (ஆரம்) அவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

# யாழ். ஆயர் வாழ்த்துச் செய்தி

யோசவ் வாஸ் முனீந்திரர் இலங்கைத் தீவின் அபோஸ்தலர் எனப் போற்றப்பட்டு இவருக்குப் புனிதப்பட்டம் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. இக்கால கட்டத்தில் இவர் புகழ் பரப்ப இவர் பணியைச் சித்தரிக்கும் நாட்டுக்கூத்து வெளிவருவது காலத்தின் தேவையை அறிந்து நிறைவு செய்யும் முயற்சியாகும். எனவே இந் நாட்டுக்கூத்தை எழுதிய பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்கைச்சார்ந்த ஆ. செகராசசிங்கத்தையும் புகழாமல் இருக்கமுடியாது.

இவரது நாட்டுக்கூத்து நடையானது எளிதானதாகவும் எல்லோராலும் புரிந்து கொள்ளக்கூடியதாகவும் அமைந்துள்ளது. பாரம்பரியக் கதைகளையும், மக்களிடையே பிரபல்யமான விடயங்களையும் வைத்துக் கூத்துப்பா இசைப்பது எளிது. ஆனால் இவர் யோசவ் வாஸ் முனீந்திரரின் வாழ்க்கைச் சரிதையை கதையாக்கி அதனை நாட்டுக்கூத்து கலைவழியாக வெளிக்கொணர்ந்தது இவரது கலைஆர்வத்தையும் மறையார்வத்தையும் வெளிப்படுத்துகின்றது. இவரது இம்முயற்சி தகுந்த பலன் தரவும் மக்களிடையே யோசவ் வாஸ் முனீந்திரரின் வாழ்க்கை முறையை எடுத்தியம்பும் நாட்டுக்கூத்தாகவும் இது அமைய இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.

**வண. தோமஸ் சவுந்தரநாயகம்**
**ஆண்டகை**
*யாழ். ஆயர்*

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குத் தந்தையின் ஆசியுரை

"தோன்றிற் புகழொடு தோன்றுக - அஃதின்றேல்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

*பாஷையூர் பெற்றெடுத்த புலவர் ஆ. தேவசகாயம் பிள்ளை (செகராசிங்கம்) அவர்களின் அரிய ஆக்கத்தில் ஒன்றான "யோசவ் வாஸ் முனிவர்" நாட்டுக் கூத்து மலர் வெளியீட்டில் ஆசியுரை வழங்கி ஊக்குவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.*

*இப்பெருமகனை ஈன்றெடுத்த பாஷையூர் மண் இன்று பெருமித மடைகின்றது என்றால் அது மிகையாகாது. செகராசசிங்கம் அவர்கள் ஒரு இலக்கியப் படைப்பாளர். இவரது கரத்தினிலிருந்து நாட்டுக்கூத்து மட்டுமன்று சிறுகதை, கவிதை, கட்டுரை போன்றன மலர்ந்து இன்று இலக்கிய உலகில் தனக்கென ஒரு இடத்தை வகுத்துள்ளார்.*

*எனவேதான் இவரின் படைப்புகட்காக பாஷையூர் வளர்பிறை நாடக மன்றத்தினர் இவருக்குப் பொன்னாடை போர்த்தி "முத்தாரக் கவிஞர்" என்னும் கௌரவப் பட்டத்தை வழங்கிக் கௌரவித் திருக்கிறார்கள். திருமறைக் கலாமன்றம், நாட்டுக் கூத்துக் கலைக்கு இவர் ஆற்றிய அரும்பணிக்காக "கலைஞர் கௌரவம்" சான்றிதழ் வழங்கிப் பாராட்டியுள்ளது. "செந்நாப்போதர்" ,"பாஷையூர் புலவர்" என்றும் செல்லக் கௌரவப் பெயர்களால் மக்கள் இவரை அழைக்கிறார்கள். இவை அனைத்தும் திரு. செகராசசிங்கத்தின் இலக்கியப் படைப்புகட்குக் கொடுக்கப்பட்ட விலை மதிப்பில்லாப் பரிசில்களேயாகும்.*

*ஆசியுரை வழங்கிப் பாராட்டும் இவ்வேளையில் இன்னும் பல்லாண்டு எம்மிடையே வாழ்ந்து காலத்தின் தேவைக்கேற்ப பல புதிய இலக்கியங்களைப் படைத்து எம் சமூகத்தின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் கைகொடுக்கும் ஆசானாக இருந்திட வாழ்த்தி நிற்கின்றேன்.*

*தங்களின் சேவையைப் பாராட்டி நிற்கும்*

***கி.ஜோ. ஜெயக்குமார்***

*பங்குத் தந்தை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கியோன் உரை

ஆசா. யோசவ் வாஸ் சரித்திரத்தை நாட்டுக்கூத்தாக நான் எழுதக் காரணமாய் அமைந்த சம்பவம் இன்றும் என் நினைவில் உள்ளது. அவ்வேளை எங்கள் கோவில் பங்குக் குரவராயிருந்த அருள்திரு பிரான்சீஸ் அடிகளாரின் வேண்டுகோளின்படி நாடகக்கலையில் ஈடுபாடுள்ளவரும் கல்விமானுமாகிய திரு.ச.ஏபிரகாம் ("ஆரம்") ஆசிரியர் அவர்கள் என்னிடம் வந்து "அண்ணே! குருமணி யோசவ் வாஸ் முனிவர் இலங்கையில் காலடி எடுத்துவைத்த 300ஆவது ஆண்டு நிறைவுறுவதால் அவரது வாழ்வையும் தொண்டையும் விளக்கி, பழம்பெரும் தமிழ் மரபான நாட்டுக்கூத்து வடிவில் அதனைப் பாடித்தரும்படி பங்குத் தந்தை கேட்கிறார். நீங்கள் இதனைப் பொறுப்பேற்று எழுதவேண்டும், உங்களுக்கு வேண்டிய மெட்டுக்களை நான் தந்து உதவுவேன்" என்று கேட்டுக்கொண்டதோடு குருவானவர் வழங்கிய ஆசா. யோசவ் வாஸ் சரித்திர நூலையும் என்னிடம் தந்தார்.

ஆசிரியர் ச. ஏபிரகாம் அவர்கள் நான் முன்னர் எழுதிய இரண்டு நாடகங்களுக்கு மெட்டு அமைத்தும், வசனங்கள் எழுதியும் உதவியுள்ளார். எனவே இவரது வேண்டுகோளைத் தட்ட முடியாது நாடகத்தைப் பாடி முடித்தேன். பாஷையூர்ப் பாதுகாவலராம் புனித அந்தோனியாரின் திருவிழாவை சிறப்பிக்கும் முகமாக 1988ஆம் ஆண்டு ஆனி மாதம் 16ஆம் திகதியன்று யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டவர் முன்னிலையில் இந்நாடகம் மேடையேற்றப்பட்டு பலரது பாராட்டுதல்களையும் பெற்றுக்கொண்டது.

இந்தப் பொன்னான நன்நாளில் அதே மேடையில் வைத்து திருமறைக் கலாமன்ற இயக்குனர் அருள்திரு நீ.மரியசேவியர் (சவிரிமுத்து) அடிகளார் எனக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததை நான் பெரும் பேறாகக் கருதுகின்றேன். இவரது அனுசரணையுடன் இந்நூல் அச்சேற்றப்படுவது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது. யோசவ் வாஸ் நாட்டுக்கூத்து நூலுருவில் வெளிவருவதற்கு பொருளுதவி நல்கிய எனது மகன் செ. ஜெயசீலன் அவர்களுக்கும், மெய்வருத்தம் பாராது, பசிநோக்காது, கண்துஞ்சாது, பல வகைகளிலும் நூல் வெளிவருவதற்காகப் பாடுபட்ட எனது மகன் செ. சத்தியசீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(பாலா) அவர்களுக்கும் எனது மனம் நிறைந்த ஆசீர்வாதங்களைத் தெரிவிக்கின்றேன்.*

*இதற்கு வாழ்த்துச் செய்தி வழங்கிய யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக்கும், ஆசியுரை வழங்கிய எமது பங்குத் தந்தை அருள்திரு கி. ஜோ. ஜெயக்குமார் அடிகளார் அவர்களுக்கும் மதிப்புரை எழுதித்தந்து அச்சேற்றுவித்துத்தந்த எனது மதிப்புக்குரிய பேராசிரியர் அருள்திரு நீ. மரியசேவியர் அடிகளார் அவர்களுக்கும் இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.*

*அன்புடன்*

***ஆ. செகராசசிங்கம்***

*பாஷையூர்*
*15-08-94*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# நாடக ஆசிரியர் அறிமுகம்

திரு. ஆசீர்வாதம் செகராசசிங்கம் அவர்கள் யாழ்ப்பாணம் பாஷையூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் சிறு வயது முதற்கொண்டே கவிதைகள், நாடகங்கள் எழுதும் ஆற்றலைப் பெற்றவர். கிறிஸ்மஸ் பரிசு, வெற்றியின் இரகசியம், சூழ்ச்சிக்காரன்வீழ்ச்சி, சூர்ப்பனகையின் சூழ்ச்சி, மனோகரா, பூதத்தம்பி, முரளீதரன், சம்பூர்ண அரிச்சந்திரா, இம்மனுவேல் ஆகிய நாடகங்களை எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்களை எழுதுவதற்கு தனக்குப் பல வழிகளிலும் ஒத்தாசைகள் புரிந்து வந்த அண்ணாவியார் தீயோ இராசேந்திரம், அண்ணாவியார் சி. குணசிங்கம், ஆசிரியர் 'ஆரம்' ஆகியோரை மறந்தாரில்லை. இந்நூல் வெளிவருவதற்கு இவரது மூத்த மகனும், இளைய மகனுமே காரணம் என்று கூறிக்கொள்வதில் ஆனந்தம் அடைகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருமணி யோசவ் வாஸ்

## (நாட்டுக்கூத்து)

### காப்பு விருத்தம்

சீரோங்கு சத்யமறை சிறக்க வென்று
திகழ்கோவைப் பதியிருந்து திறம்பா ஞானம்
நேரோங்கவே யிலங்கைப் பதியில் வந்து
நிகழ்போத னைகள் சாதனைகளாலே
பாரோங்கு பரன்மறையைப் பலுகச்செய்த
பண்ணவன் யோசவ்வாஸ் நற் காதைதன்னை
தாரோங்கு தமிழால் நாடகமாய்ப்பாட
தர்ப்பரனை ஈன்றகன்னித்தாய் காப்பாமே

### அவை அடக்கம்

சாக்கடை நீரொழுகி சாகரம்தன்னைச் சார்ந்தால்
தாக்கியதனைத் தள்ளாது தன்குலமென்றே கொள்ளும்
நூற்றெளிவுள்ள பேர்கள்நுண் ணறிவிலன் யான்செய்யும்
பாக்களிற் பிழைபொறுத்துப் பரிவுடன் ஏற்பார்தானே

### தோடயம்

எரிதிரி மெழுகெனவே உடலை
இறைபணி யினுக்காய் ஈந்தமுனி
கருதரு யோசவ்வாஸ் சரிதை
காவிய மாய்ப்பாட

பரனருள் பெற்றுயர் பாக்யவதி
பன்னிரு தாரைகள் சென்னிவதி
உரக மதனை மிதிபாதமதி
உத்தமி காப்பாமே

மரிதரு மகிபனை மார்பணைத்த
மாதவன் சந்த அந்தோனிமுனி
புரிநவந் தன்னையே அடியேன்
புந்தியிற் கொண்டேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருமணி யோசவ் வாஸ் வரவுசபை கவி

அறங்கெட மறந்தழைக்க அத்தன்மா வேதங்குன்ற
திறம்பட அலகைவேதம் தேவனும் நோக்குற்றாரால்
உறங்கிடா துயர்வேதந்தான் ஒளிபெறப் பதிதர்வேதம்
புறங்கொடுத்திட யோசவ்வாஸ் புனிதரும் புறப்பட்டாரே

## யோசவ் வாஸ் கொச்சகம்

கழலால் என்றும் வலம்வந்து
கையா லுன்னை அருச்சித்து
தொழமெய் யாலே துதித்துந்தன்
தொண்டன் யானும் என்றென்றும்
புகழ வாயால்த் தலைவணங்க
போதங் கேட்கக் காதார
சுழலும் உலக பந்தமெனும்
தொந்தம் நீக்கி எனைஆள

## தரு

இராகம் : கல்யாணி தாளம் : அடதாளம்

ஓதித்துதிப்பேனே செபமாலை
ஓதித்துதிப்பேனே
ஓதித்துதித்தேநம் உட்பகைஆற்ற
ஓயாது வாயார ஓமரியே யென்று
சோதியைச் சுடரைத் தூமணி மாலையை
சுத்தி கரித்த நற்பக்திப் பாமாலையை - ஓதி

## கொச்சகம்

என்னைப் படைத்த இறையவனை
எனக்காய் மரித்த திருமகனார்
தன்னைப் பயந்த தவமணியே
தவிது கோத்தி ரக்கனியே
சென்மப் பிணியை அறுத்தவளே
தேவ தோத்தி ரத்தொனியே
உன்னைப் பணியும் எமக்காயுன்
உதரக் கனியை மன்றாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரு

ஆதியுமந்தமும் இல்லாத தேவனை
அற்புதமாகவே உற்பவிக்கப் பெற்ற
சோதிதிருப்பாதம் தோத்தரித்தே தினம்
துத்தியமாக ஐம்பத்தி மூன்றுமணி – ஓதி

## கொச்சகம்

என்னைத்தாக்கும் மனத்தாசை
இதயத்திருந்தே அழித்தொழித்து
சென்மத்துறு நற்பெறுபேறு
தேவதாயே எனக்களித்து
கன்மத்தில் நான் ஒருபோதும்
களவுபொய் காமம்கோவம்
என்னப்பகரும் இவை நீக்கி
இதயசுத்தி அருள்வாயே

## தரு

பத்துப்பத்தாய்ப் பிரியதத்தமந்திரம்
பத்தியுடனே ஐம்பத்திமூன்றுமணி
முத்திப்பேறுபெற்ற மோட்சஇராக்கினி
முன்வைத்துச்சென்ம கன்மப்பிணிகள்அற

## வசனம்

சீருடன் யேசுவின் சிலுவை நாமத்தால்
பாருடன் சரீரம் பசாசெனப் பெயர்
கூறிடும் ஆன்மசத்துருக்கள் மூன்றையும்
வேருடன் களைந்து வெற்றி கொள்ளுவாம்

## வேறு ஊரிலிருந்து வந்த குருவுடன் யோசவ் வாஸ்
## கவி

இந்துகண்ட சாரோசம்
என்ன உந்தனின் வதனம்
நொந்துவந்த காரணந்தான்
நுவலுமிப்போ சற்குருவே
முந்து பரிதியதன்
முன்பனிபோல் உன்துயரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தமரி சுதனார்
தான்தீர்ப்பார் தப்பாது

**வசனம்**

குருவே அன்றலர்ந்த செந்தாமரை போல் என்றுமுள்ள நின்வதனம் சீன தேச விசயத்தின் பின் வாடி துயருற்றிருப்பதன் காரணம் நான் அறியக் கூறுவீராக

**குரு.யோசவ் வாஸ்**

**தரு**

இராகம் : கரகரப்பிரியா தாளம் : ரூபகம்

சீரிலங்காபுரியில் சிறிதுநாள்
சென்றிருந்தேன் குருவே அங்குநானும்
நேரினிற் கண்டசெய்தி நிகழ்த்தநா
தான்வருமோ குருவே

**யோசவ் வாஸ் தரு**

ஏதுகண்டீர்முனியே உமக்கங்கு
என்னநடந்ததுவோ அதைச்சிறி
தோதுவாயிப்போது யானும்அதை
உற்றறியத் தானே

**குரு**

சத்திய மாமறையைச் சருவரு
பக்தர்கள் தம்மைநிதம் வெகுவாக
சித்திர வாதையதே செய்யக்கண்டேன்
சேதியிதே அறிவீர்

**யோசவ் வாஸ்**

அத்தன் திருச்சுதனார் அருளிய
சத்திய மாமறைதான் ஐயையகோ
நித்தம் அருகிடவோ எனதுடை
நெஞ்சு பொறுக்குதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரு வசனம்

யோசவ்வாஸ் அடிகளாரே ஈழத்துக் கத்தோலிக்க மக்கள் முப்பது ஆண்டுகளாக குருக்கள் சேவை இல்லாமையால் பூசை பிரார்த்தனை பாவசங்கீர்த்தனம் முதலிய தேவதிரவிய அனுமானங்கள் பெறமுடியாமல் ஒல்லாந்தரின் அடக்குமுறையால் அவஸ்தைப்படுவதை நேரில் அறிந்து வந்தேன் குருவே

## யோசவ் வாஸ் விருத்தம்

அடித்துச் சிலுவை தனிலறைந்த
அத்தன் மரித்து மூன்றாம்நாள்
எடுத்துச் சிலுவைதனைக் கொண்டு
இகத்திருந்து பரத்துற்றார்
தொடுத்து நெருப்பைத் தலைகீழாய்
தூக்கினாலும் சுவாலையது
அடுத்துக் கீழாய் நோக்கிடுமோ
ஆகாதென்று அறிவீரே

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

## வசனம்

ஆகா கேளுங்குருவே, ஈழத்து கத்தோலிக்க மக்கள் படும்இன்னல்களையும் ஆகடியங்களையும் யானும் அறிவேன். ஆயினும் ஒல்லாந்தரின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள பகுதிகளில் எவரும் குருக்கள் வேடத்தில் பிரவேசிக்க முடியாது ஆகவே எனது சீஷனையும் அழைத்துக்கொண்டு மாறுவேடம் பூண்டு யாசகர் உருவில் அங்குசெல்ல முயற்சிப்பேனாக

## கட்டியக்காரன் வரவுசபை கவி

கட்டியக்காரன் வந்தானே
சபையோர்மெச்ச
கட்டியக்காரன் வந்தானே

கட்டியக்காரன்வந்தான் பட்டியலெல்லாம் தொகுத்து
கட்டியபையோடுகையிற் பட்டயமும் தானெடுத்து

சட்டைசர்வாணிபூட்டி
சரிகைச்சீராவும் மாட்டி
பொட்டிட்டு நெற்றியிலே
பொருநனென்ன நடந்து-கட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசைக்கு நெய்தடவி
மிடுக்காய் முறுக்கிவிட்டு
ராசப் பிரதானிக்கர்
ஆனேர்வரவுகூற-கட்டி

## கட்டியன்தரு

இராகம்: கல்யாணி	தாளம்: அடதாளம்

ஆடவர்மகளிரே வாருங்கள் எங்கள்
அண்ணல் வான்நீட்டிங்கு வருகிறார்
கூடுமிக் கூட்டத்தில் கூடுங்கள் அந்த
குரிசிலம் புகழ்தனைப்பாடுங்கள்

மாறுகொண்டு தெருகூட்டுங்கள் நல்ல
மகரதோரணங்களும் பூட்டுங்கள்
நாறும்சந்தனம் அகில்கோட்டமும் கூட்டி
நல்ல வாசனைத்தூபம் காட்டுங்கள்

நட்டுவாங்கங் கொட்டி ஆடுங்கள் மேலும்
நாதசுரம் மீட்டிப்பாடுங்கள்
பட்டிகரைக் கடிந்தோட்டுங்கள் தமிழ்
பாவலரை ஒன்றுகூட்டுங்கள்

வாழைகமுகுகள் நாட்டுங்கள் வண்ண
வண்ண மலர்ச்சரம் பூட்டுங்கள்
சாலையெல்லாம் சோலையாக்குங்கள் யாதும்
சந்தடிசெய்யாது நோக்குங்கள்

## பட்டியல் வாசித்தல்

மட்டக்களப்புத் திருகோணா
மலையும் காலித் துறைமுகமும்
தொட்டுக் கொழும்புக் கோட்டையையும்
தொடர்ந்து நீர்கொழும்பையும்தன்
கட்டுப்பாட்டில் மன்னாரும்
கருதும் ஊர்காவற்றுறையும்
இட்டம்போலக் கைப்பற்றி
எதிர்த்தபேரை அதம்பண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசனம்

வல்லாண்மை மிக்க வான்றீட்டுரையவர்கள் சபைக்கு வருகிறார் முன்னோடியாக தளபதியும் பிரதானியும் வருகிறார் மகாசனங்கள் அமைதியாய் இருக்கும்படி கேட்கப்படுகிறீர்கள்

## வான்றீட்டின் தளபதிவரவு சபைகவி

மறுவறு மன்னன்சேனை
மாகமும் கடலும்பூவும்
உறுபரிகரி ரதங்கள்
ஊர்ப்படை நாற்படைக்கும்
பெறுமதிகாரங் கொண்டு
பிறங்க லத்திறங்கள்கண்ட
தறுகணாண்மை மிகுந்த
தளபதி சபைவந்தானே

## தளபதி தரு

இராகம்: ஏதுகுலகாம்போதி தாளம் : அடதாளம்

அண்டமும் கெடிமண்டிடப் படையே
அணிசேர் பணிசேர் விறல்
கண்ட புயவலிகொண்ட தளபதிநான்
இன்றே சென்றே அந்த
ஏந்தலின் பதில்சார்ந்த தலைவனை
ஏதெனப் பலகாதை யாவையும்
ஏற்றுமே பதில்சாற்றிடற் கெனவே
இச்சணம் செல்லுவேனே

கல்லைநிகர் புயவல்ல வீரர்களும்
கடல்போல் அடலே செயக்
கரிரதபரி பெருபடை களுடன்
பொரவே எழவே எந்தன்
சொல்லை எதிர்கொள வில்லிலம்பெனவே
எல்லைதனிலே நிலைகொள்ளவென வமைத்து
வல்லஅரசனிடம் உள்ள நிலைபகர
துல்லிபமாய் நடந்துசெல்லு வேனிப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அணு
### வயம்விளங்க செயந்துலங்கச் செல்லுவேன்
### மந்திரி வரவு சபை கவி

ஆம்பல கலைகள் கற்று
அறிவொடு புகழும் பெற்று
சோம்பல் பொய் மௌட்டியமின்மை
சுயமே ஊகித் தறிதல்
மேன்படு செயல்கள் பெற்று
மேதினி மதிவல் லோனும்
தேம்படு சொல்லார் வல்லான்
தொல்சபை வருகின்றானே

### மந்திரி தரு

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஏகம்

செய்ய கடல்சூழும் சீரிலங்கை ஆளும்
செம்மல் வான்றீட்ட திபன்
சேவைசெய் மந்திரி நான்

காலமதை ஓர்ந்தே கருதுநிலை தேர்ந்தே
சீலமே சிதைவுறாது
சேவைசெய்வேன் நானே

கூர்மதியோன் யானென்கொள்கை தன்னைக் கூற
கொற்றவன் அவையிடத்து
பற்றிடச் செல்வேனே

### அணு
### தலைவனிடம் நிலை அறியச்செல்லுவேன்

### தேசாதிபதி வான்றீட் வரவு சபைகவி

தான்நாட்டும் கோல்கோடாது
தகைமைசேர் ஒல்லாந்தென்னும்
மேன்நாட்டை ஆளுகின்ற
வேந்தனின் பதில்விளங்க
கோன்தீட்டும் செயல்கள்யாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புமா நகரிலாற்ற
வான்றீட்டெனும் அதிபன்
வளர்சபை வருகின்றானே

### அரசன்வரவு தரு

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

அலையெறி கடல்புடை சூழும்நாடிது
அரசர்கள் திறைதரத் தேடும்நாடிது
கலைஞர்கள் கனசபை கூடும்நாடிது
கவிஞர்கள் காவியம் பாடும்நாடிது
பக்தர் பல்லாண்டு பாடிப்பாதாம் புயமேசூட
உத்தமன் ஒல்லாந்து தேசஉயரதிபதிநான்

திருவளர் சீரிலங்கா புரிதனை
திறமிகு பெருபடை சேரவேவரு
மருவலர் படைகளை மருவியேபொரு
செருவினில் அவர்களைச் சிதறவேபெரு
வெற்றிப்பிரதாபமே பெற்றுப் பெருமிதமே
பற்றித் தவிசுறையப் படருவேன்நானே

### அணு
### பேரரசுப் பிரதிநிதியாகவே

### மந்திரி தளபதி அரசனை வரவேற்றல்
### சந்ததாழிசை

விட்டுவாள் வீசஎழில்
விளங்குமவுலிச் சிரம்
தொட்டுவாள் வீசுந்தொடைகள்
தூயமார் பிலங்கவே

### தளபதி

பட்டுவாள் ஒட்டார்கள்
படைசிதறி ஓடவே
இட்டுவாழும் ஏந்தல்நின்
இணைசரண மேசரண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மந்திரி வசனம்

உலக மகாபலம்பொருந்திய ஒல்லாந்துதேசபரிபாலனத்தின் கீழ் இலங்கையின் கரையோரப் பகுதிகளை கொழும்பிலிருந்து பரிபாலனம் செய்யும் வான்றீட் அதிபதியே சரணமே சரணம் ஐயா

## வான்றீட் மந்திரி தளபதி நாட்டுவைபவம்

இராகம்: சாமா தாளம்: ரூபகம்

மந்திரியே நம்பதியின் தேச -
வளமதனை உளமறிய
வழுத்திடுவாய் விளப்பமுடன்

## மந்திரி

வான்மழை தான்தொடர உயர்
வானநிலையே அதனால்
வயல்களெல்லாம் மிகவிளைவே

## வான்றீட் தளபதியை விளித்து

இராகம்: முகாரி தாளம்: அடதாளசாப்பு

அத்திபரிரதம் அத்திபரிரதம்
மெத்து காலாட்படை ஆனதே வெகு
சத்தியதோ அன்றி
மத்திபமோ அதைச் செப்புவாய்

## தளபதி தரு

சக்திமிகு படை
நித்தம் அதிகரித்திட்டதே படை
மெத்து பயிற்சிநம்
உத்திப்படி நடைபெற்றதே

## வான்றீட் மந்திரியை நோக்கி

சேதிமங்கள் யாவதிலும் தேவ
தொழுகையிலே வழுவுளதோ?
தெரியஉரை பகருவையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

### மந்திரி தரு

ஆதிபனே சேதிமங்கள் தோறும்
அந்திசந்தி வந்துமக்கள்
புந்தியுடன் தொழுதிடுவார்

### வான்றீட் தளபதியைப் பார்த்து

ஆனதும் ஆவதும்
மேவினி ஆவதும் ஏதென மறு
ஏனையதும் சதுர்
ஞானமுடன் செயலாற்றுவீர்

### தளபதி தரு

போற்றும் புரவலன்
சாற்றும் முறைப்படி ஏற்றுமே யானும்
ஆற்றலுடன் செயல்
ஆற்றச் சிரமிசை ஏற்றுளேன்

### வான்றீட் மந்திரியை நோக்கி

கண்களெனவே விளங்கும் நாட்டின்
பெண்கள்நிலை எங்ஙனமோ
புரியஉரை தருகுவையே

### மந்திரிதரு

புரியஉரை தெரியிதுவே போற்றும்
புரவலனே அரிவையர்தம்
பரிவினிலே சொரியும்மழை

### வான்றீட் விருத்தம்

நலமதென நிலைமைதனை நவிற்றினீர்கள்
நல்லரசும் வல்லபடை வலிமையாவும்
தலமதனில் வளமதெல்லாம் கேட்டேயானும்
தாங்கவொண்ணா மகிழ்ச்சியுற்றேன் தகைமைமிக்க
கலங்கடலில் வலம்வரவும் ககனமேவும்
காவலுடன் ஏவலதும் கவனமாக
நிலமதிலும் பலம்பொருந்த வைத்துக்காப்பீர்
நிச்சயமாய் லட்சியத்தை நினைவிற்கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வசனம்

மாமதி மந்திரியே மருபெருந்தந்திரியே இந்த இலங்காபுரியிலே நமதாட்சிக்குட்பட்ட கரையோரப்பகுதிகளை நம்மிடம் பறிகொடுத்த போத்துக்கேயர் மீண்டும் மீட்டெடுக்க முயற்சிக்கக் கூடும். எனவே மாற்றாரெவரும் இங்கு ஊடுருவாவண்ணம் வெகுஜாக்ரதையாக காவல்புரிவீராக

### கப்பல் கப்பித்தான் சிப்பாய் வரவு சபை கவி

### கப்பித்தான் தரு

தாளம் : ஆதி

இராகம்: மோகனம்

செகத்தை அகத்தினுள்ளே அடக்கி
சீறியெழும் கடலிலே மலையென
அலையில் எனதுகப்பல் உலைவிலாது செல்ல
தலைமை தாங்கும் உயர்தளபதிநானே

### சிப்பாய்

நீல நெடுங் கடலிலே நிலைபெயர்
கால நிலை எதனிலும் எமதுகப்பல்
சேடனென வெழுந்து சீறிச்செல்லவமைத்து
பீடுடை என்பெயர் புரியவைப்பேனே

### கப்பித்தான்

கல்லடுத்த புயத்தோன் கனைகடல்
செல்கலத்து நயத்தோன் மிடல்மிகு
கப்பித்தானுரிமை ஒப்பித்தே பெருமை
செப்பித்தானேசெய்ய சபையில்வந்தேனே

### சிப்பாய் தரு

ஓடுங் கலங்கடலிலே உளமுறத்
தேடுந் திரவியங்களை சேகரித்
தாடுங் கடலலைகள் போடுந் தாளத்தினுக்கு
பாடுங் கலைபயில் சிப்பாயும் வந்தேனே

### வான்றீட்டின் மந்திரி தளபதி ஊர்வலம்

கேளுந் தளபதியே இந்தஊரினில்
வாழும் மனிதரெல்லாம் தாமிங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் பொழுதிலும் மாமரியேஎன்று
நாடிச் செபிப்பதை நாமறிந்தோம்

**தளபதி**

ஆளும் நமதுஅரும் மறையைவிட்டு
அன்னிய வேதமதையே தொட்டு
பாழும்மரி நாமம்நாளும் பொழுதிலும்
பாவனை செய்கிறாரே பதிதர்

**மந்திரி**

இந்த சிற்றூரினில் எந்தக் கோவிலுண்டோ
அந்தப் பகுதிகளில் நாம்சென்று
முந்தத் தொழுகையில் எந்தப்பதமென்று
சந்தித்தறிவோமே மேற்கொண்டு

**தளபதி**

கன்னிமரியென்றும் அன்னைஎன்றும்சிலர்
உன்னுகிறார்களிவ ரென்றென்றும்
சென்னித் துணிவோ சிறுமதியோதெரி
யாத்தனமோ புரியோம்நாமிங்கு

**மந்திரி வசனம்**

தளபதி நாமின்று நகர்வலம் வந்து கண்ட காட்சிகள் யாவும் நம்மை ஏமாற்றிவிட்டன. ஆகவே நாம் தொடர்ந்தும் பவனிவந்து கத்தோலிக்கரை தேடிப்பிடித்து சித்திரவதைக்குள்ளாக்குவோம் வருவீராக.

**யோசவ் வாஸ் தூத்துக்குடியிலிருந்து கப்பலில் இலங்கை நோக்கிபுறப்படல்**

**கப்பல் கப்பித்தான் சிப்பாய் தரு**

இராகம் : நாகவராளி தாளம் : ரூபகம்

ஏலைஏலோம் தத்தைதாம் ஏலைஏலோம்
பாலயேசு துணையிருக்க நாமும்
பரவைதனில் கப்பல்விட்டோம்
ஏகனே மூவரொன்றாகிய தேவன்
என்னேரமும் எங்கள் முன்னிலேநிற்பார்



6932CC
155308

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகரந்தன்னிலே வேகமதாக
தானேகுதே கப்பல்தாவிக்குதித்து

**கப்பித்தான்**

சீலைப்பாய்தன்னைச் சீராயிழுத்து
சீறிவருங் காற்றைச் சேரவணைத்து
வேலையின் மேற்கப்பல் வேகமாய்ப்போக
வித்தாரமாய்ச் சுக்கான்வைத்துப்பிடித்து - ஏலை

**சிப்பாய்**

தோற்றுதுறைதன்னை விட்டு நாமும்
தொடுதுறையை அடைவதற்கு

**கப்பித்தான்**

சாற்றுதுறை பலகடந்து இப்போ
தங்குதுறை தனை அடைய

**சிப்பாய்**

வளமானகாற்று வருகுதேபார்த்து
வாறாத்தினைக் கொஞ்சம் வாங்கிஅடுத்து
சுழலவிடாமலே தோணியைச் சற்றும்
சூக்குமமாகவே நோக்கும்பயணம் - ஏலைஏலோ

**புயல் ஆரம்பம்**
**கப்பித்தான்**

காற்றுவரும் மாற்றமிதோ பாரும்
கரைதுறையே தெரியவில்லை

**சிப்பாய்**

சீற்றமுடன் அலைமலைபோல் இங்கு
சீறிவரும் வாறெதுவோ

**கப்பித்தான்**

ஏற்றியபாயை இறக்கிடுவோமே
இல்லைஎனில் மிகத்தொல்லையதாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிப்பாய்**

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

கற்றுடன் நாம் பொர ஆற்றாதுபாரும்
கர்த்தனேஎங்களை இத்தினங்காரும்

**வசனம்**

பிரயாணிகளே கொஞ்சம் அமைதியாய் இருங்கள் காற்றையும் கடலையும் எதிர்த்து நாம்முன்னேற முடியாதுகடவுள்தான் நம்மைக் காப்பாற்றவேணும்

**யோசவ் வாஸ் புயலை அடக்கும்படி கடவுளை வேண்டுகிறார்**

**பரணித் தரு**

காற்றுடனே கடலும்மிகு மாற்றங் கொண்டு
கடும்புயலும் இடம்பெயர்ந்து வருகு தந்தோ
கலங்கடலுள் மூழ்காது கருணை கூர்ந்து
காத்தருள வேண்டுகிறோம் காருந் தேவா

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

**தரு**

ஆழ்கடல்மீதிலே அலைமேல்நடந்தவா யேசுநாதா
அடியேமைக்கார் தேவபாலா இப்போ
சூழ்புயல்நீக்கி யேதுணைசெய்யவேண்டுகிறோம் தேவபாலா
எங்கள்துயர் தீரும்பாலா

**பரணி**

பற்பல வேதத்திலுறு பதிதரோடு
பரவைதனிற் பெருபுயலிற் பரிதவிக்கும்
அற்பவிசு வாசிகளும் அப்பாஉந்தன்
அருமறையின் புரிபோதம் தன்னைஏற்க

**தரு**

கச்சளம் நீக்கியே கதிரோன்ஒளி தனைக்காட்டவேணும்
கருணைக்கரம் நீட்டவேணும் இந்தக்
கலத்தினில் உள்ளவர் உளத்தினிற்தென்பினை ஊட்டவேணும்
உனதுபுகழ் நாட்டவேணும்

**புயல் அடங்கியதும் யோசவ் வாஸ் வசனம்**

பிதாசுதன் பரிசுத்த ஆவியின்பேராலே சமுத்திரத்தில் எழுந்து நம்மை வாதைப்படுத்திய புயல் தணிந்துவிட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே நம்மை இந்த அபாயத்திலிருந்து காப்பாற்றிய
இறைவனுக்கு நன்றிசெலுத்துவோமாக

### கப்பித்தான் வெண்பா

காற்றும்கடலுமுந்தன் கட்டளைக்குள் ளேஅமைய
சாற்றும்படி அரனைத்தான் வேண்டி ஏற்றீர்
இறைவனுக்கு நன்றி இறைதூதுதனுக்கு நன்றி
நிறைவே தத்துக்கு நன்றியே

### கப். வசனம்

ஐயாபெரியவரே இவ்வளவு சக்திவாய்ந்தவர் என்பதனை இப்போ கண்ணாரக் கண்டோம். கிறீஸ்துபெருமானை வேண்டிகாற்றையும் கடலையும் அமைதி பெறச்செய்து இத்தனை உயிர்களையும் காப்பாற்றி னீர்கள் எனவே இறைவனுக்கும் உமக்கும் நன்றிகூறுகிறோம் தந்தையரே

### சிப்பாய் வசனம்

எசமான் அதோ ஒருகரை தெரிகிறது. சந்தேகமில்லை இன்னும் சிலமணி நேரத்தில் அங்கு போய்ச் சேர்ந்து விடலாம்

### மன்னார்துறையில் கப்பித்தான் கவி

ஆழ்கடல் மீதிலேநாம் அலையெறி புயலிற்சிக்கி
தோள்வலிதனை இழந்தே துன்புற்றே இன்புற்றோம்பின்
சூழ்நிலை பார்த்து மன்னார் துறையினி லிருந்து பின்பு
யாழ்நகர்சேர அந்தநாளதை எதிர்பார்ப்போமே

### வசனம்

பிரயாணிகளே நான்கு நாட்களில் யாழ்ப்பாணத்துறையை அடையவேண்டி நாம் புயலில் அகப்பட்டு அன்னஆகாரமின்றித் தவித்து பலநாட்களின் பின் மன்னார்துறையை வந்தடைந்தோம் எனவே காலநிலை அறிந்து யாழ்ப்பாணம் சேரும்நந்நாளை எதிர்பார்போமாக

### மீனவப்பெண்கள் வரவுசபை கவி

வெளுப்பது கிழக்குப்பற்ற வேலைக்குள் வேலைக்கேகி
இழுப்பதும் எற்றல்பற்றி ஏலவேகாதலர் கொள்
விழுப்புறு மீனைக்கொண்டு விற்பனைச் சந்தைநோக்கி
களிப்பொடு காதற்பெண்கள் கனர்சபைவருகின்றாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னம்மா தரு

இராகம் : புன்னாகவராளி　　　　　　　　　　　　　　　　　　　　　தாளம் : அடதாளம்

எடுத்துச் செல்வீரே மீனைவந்து
எடுத்துச்செல்வீரே

இப்போபிடித்தமீன் ஈரங்காயவில்லை
இட்டமென்றால் நாட்டைத் தட்டிப்பார்த்துக்கொள்வீர்
கட்டாகயல்மீன் கடல்மறிசீலாவும்
மட்டாயிருக்குது விட்டால்கிடையாது

ஆழ்கடல் தன்னிலே நீள்கலத்தில் சென்று
அத்தான் குறிவைத்து எற்றிப் பிடித்தமீன்
சூழ்புயல் காற்றுமழை வெயில்பாராது
தோள்வலியாலே துரத்திப்பிடித்தமீன்

பாய்ச்சுவலையுறு பாலைகயலுடன்
பாங்காய் பிடித்தமீன் இங்குகொண்டு வந்தேன்
வீச்சுமீனுமுண்டு வேண்டுவீரென்றும்
விற்கும்விலையினிற் சொற்பமதே இப்போ

### மாறுவேடத்தில் மந்திரி தளபதி

என்னவிலை அம்மா இந்தமீனுக்குச்சொல்
ஏதுந்தன் ஊரம்மா ஓதுந்தன் பேரம்மா
விற்கும்விலை சொல்வீர் வேண்டிநாம் செல்லுவோம்
வேலையின் மீன்விலை சாலையிற் சொல்லுவீர்

### அன்னம்மா

இந்தஊர் தானெங்கள் சொந்தவூர் தானையா
எங்கள் குருகுலம் ஈட்டும் பெருவளம்
வந்தார் வரத்தாருக் கிந்தக்கதை ஏனோ
வாங்கியே மீனைக் கொண்டிங்கிருந் தேகுவீர்

### தளபதி

வேதமென்ன நீங்கள் ஓதும்செப மென்ன
வேண்டிய மீன்களை ஈண்டுநாம் கொள்ளுவோம்
சாதக மாகவே ஓதும்பதில் தன்னை
சாற்றியே காசைநீர் ஏற்றிடு வீரம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொன்னம்மா

பெண்களைக் கண்டால் பெரிதும் வேடிக்கையாய்
பேச்சுக் கொடுப்பதும் ஆச்சரியமாக
பேச்சுக் கிடமில்லை ஏச்சுக்கிடம் வையா
தேகுவீர் ஐயன்மீர் இந்தஇடம் விட்டு

### மந்திரி

வேதமே தென்றதற் கேதப் படுவதேன்
விற்பனைச் சந்தையிற் சொற்பரி மாறுதல்
ஈதிங் கியல்புதான் ஏனோ கோபமாக
ஆதங்க மாவதும் ஆகாதே அம்மணி

### அன்னம்மா

ஏதுங்கள் ஊரென்றும் ஓதுங்கள் பேரென்றும்
வேதங்களே தென்றும் வீணே பிதற்றுநீர்
வாதிங்கில்லை ஐயாவந்தவழி சென்றால்
போதுந்துரையே புதுமைஇங் கில்லையே

### மன்னாரிலிருந்து யாழ்நோக்கி புறப்படும் கப்பல்

மன்னாரிலிருந்து கப்பித்தான் இன்னேரம்கப்பல்
மாகடல் மீது ஏகுதேநீரும்
கண்ணாடிவைத்து முன்னாடிப்பாரும்
கற்பாருடன் திடல்முற்படுமாமே

### சிப்பாய்

வெடுவெடுப்பாய் வருகாற்றுடனே
வேகமதாகப் போகுதேகப்பல்
கடுகியேதாமான் கயிற்றினைப்பிடித்து
கட்டிடுவீர் மிகக்கெட்டியதாக

### கப்பித்தான்

கார்கடலுடனே போரிடுங்கப்பல்
கரைதுறை நோக்கி விரைவுடனே
ஏரரும் இரணைதீவினைத் தாண்டி
ஏகுதே காக்கை தீவருவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிப்பாய்

வேரவில் பொன்னாவெளி நோக்கி
வேகமாய் நாச்சிக் குடா வலைப்பாடு
பாலாவியாலே ஏலவே வந்தோம்
பாரதோ கல்லடிநேரிலே தெரியும்

### கப்பித்தான்

நேரிலே பாலை தீவு கடந்து
நீரரு யாழ்குடா நாடடைதற்கு
பார்புகழ் பாஷைப்பதியி லிறங்கி
பகரரும் பட்டணம் விரைகுவதற்கு

### சிப்பாய்

பன்னரும் பாஷைப்பதி யடைந்தோமே
பரவையிலிருந்து கரையிலிறங்கி
முன்னமே அவரவர் ஊர்மனைசேர
முனைகுவீரே நன்மனமதேயாக

### கப்பித்தான் விருத்தம்

பரவைத்தனிற் பெருபுயலிற் பரிதவித்து
பதட்டமுடன் அதிட்டமின்றிப் பலநாட்டங்கி
பரனருளால் ஒருவழி யாழ்ப்பாணம்வந்தோம்
பார்புகழும் பாசூராம் பதியிறங்கி
விரைவுடனே அவரவரூர் போய்ச்சேர்வீரே
வேதனையும் சோதனையும் தாண்டியிந்த
கரையடையக் கருணைபுரி கர்த்தனுக்கு
கரங்குவித்துச் சிரங்குவித்தஞ் சலிசெய்வோமே

### வசனம்

கேளுங்கள் பயணிகளே நாம் தேவ கிருபையால் நாம் மன்னாரிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தோம். அதனால் சுங்கத்திணைக்கள பரிசோதனையும் நமக்குத் தொல்லைதராது. எனவே நீங்கள் கப்பலை விட்டிறங்கி குதூகலத்துடனே வீடுபோய்ச் சேர்வீராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யோசவ் வாஸும் யுவாமும் கரையிறங்கி

### தரு

யாழ்நகருறு சீர்நிலைதன்னை யாமறிந்திடவே இப்போ
மேல்நடந்திடவே இந்தப்
பரவைஅருகதாய் விரையவேயொரு
பார்வைஉற்றதுவே மனம்ஆர்வமுற்றதுவே

### யுவாம் தரு

பரவைதரையுடன் பொருதவெண்ணுரை
புரையிலாதெழுந்து புற்றரையிலேவிழுந்து
எங்கும்பார்க்க வெண்டிரை போர்த்ததோஇந்தப்
பாவூரென விழைந்துமேலும் போகவேமுனைந்து

### யோசவ் வாஸ் தரு

யாதும்ஊரென யாரும் கேளென ஓதினர்பெரியோர்
இதை-யாருணர்ந்தனரோ இங்கு
போதமே மிகுவேதமோதிட யாருமிங்கிலையே
விதி-ஏதிவர்நிலையே

### யுவாம் தரு

பட்டணந்தனைத் தொட்ட ணுக்கிடஎட்டியே நடந்து
ஊரைவிட்டிடந் தொடர்ந்து இங்கு
சாதியும் மதபேதமும் மிகஓதும் நிலையிதுவே அந்தோ
தீதிவர்நிலையே

### வசனம்

பிரியசீஷனேகல்லும்முள்ளும்நிறைந்தகடின
சிலுவைப்பாதைதான் எமது பாதை எதற்கும் மனம்
சலிக்காதே வெகுசீக்கிரமாகக் கத்தோலிக்கர்களை
தேடிக்கண்டுகொள்ளுவோமாக

### தொழிலாளர்கள் வரவுசபை கவி

உத்தமத்தொழிலாளர்கள் உழுதொழிலாளன் இன்னும்
தத்துதெண்டிரை யதன்னில்தான் தொழில்புரி விற்பன்னன்
மெத்துகால்நடைகள் காத்துவியன் தொழில்புரியுமன்ன
சத்தியமறை முறையோர் சபைதனில் வருகின்றாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

## விவசாயி தரு

மருத நிலமாக்கள் எங்கள்மன்பதையோர் தம்தொழிலாம்
உழுதுவிதைத்தே பலனை உண்டுவாழுவோமே
தொழுது உண்பதில்லை எங்கள் தூயதொழிலாலேநாமு
வழுவிலாது வாழந்திருப்போம் வையமீதிலே தான்

## மீனவன் தரு

மானமுள்ள மீனவயான் மச்சம்பவளம் முத்தன்ன
ஏனையவும் கொண்டுவந்து ஈட்டுபொருளாலே
இல்லைஎன்பார்க்கில்லைஎனாதிட்டு உண்டுவாழ்ந்
திருப்போம்-எம்பெருமைசொல்லவெனில் ஏடடங்காதாமே

## இடையன் தரு

இராகம் : ஆனந்தபைரவி தாளம் : ஏகம்

ஆயர்குல நேயரும்நாம் ஆடுமாடு மேய்க்குமெங்கள்
தூயதொழிலாலே பொருள்சேர்த்து வைத்துக்காப்போம்
மாயிருஞாலத்தி லெங்கள் மன்பதையோர்தம்பெருமை
வாயினாலுரைக்க வொண்ணாவாகுடையதாகும்

## திருந்தாதி அடித்ததும் மூவரும் முழந்தாளிட்டு

அருள்நிறைந்த திருமரியாயே
அன்னை கன்னியே வாழ்க
அத்தனும்உம் இடத்திலே ஏனை
அங்கனையார்க்குள்நீயே - அம்மாஅங்க

ஆசீர்வதிக்கப்பட்டவருன்
அருந்திரு உதரத்திலே
ஆகுங்கனியும் ஆவியினாலே
ஆசிபெற்றதுமாமே - அம்மா ஆசிபெ

தெருளிலாஇச்செகத்துவாழ்விலும்
சேர்மரண நேரத்திலும்
தேவனை வேண்டியே எமக்கருள்
செய்குவாயம்மா தாயே - அம்மாசெய்குவயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தளபதி மந்திரி தொழிலாளர்

### தளபதி கல்வெட்டு

ஏதடாமதிகெட்டிப் போதடா துதிதொட்டு
இருமுழந் தாளிலிட்டு
எத்தர்காள் பித்தர்காள் சத்திமாமரியென்று
ஈதடா இரந்து நின்று
காதடாபுளித்திடக் கழறுநீர் அலறுநீர்
கயவரே பயமதின்றிக்
கன்னிமாதாவே நீஎம் மரணத்திலும்
கர்த்தனை வேண்டியென்றும்

### தரு

பாலிப்பாய் அருளென மொழிந்துமே
ஆலிப்பாய் அகமது மகிழ்ந்துமே
நீலிக்கண்ணீர் வடிக்கின்றனை
நீதமிது வாமோ

### பேதுரு தரு

அப்பனே அருமறை தருதிரு
கற்பனை அல்லது வேறொரு
சற்பனை யாகவே யாதுமோர்
சொற்பயன் கொண் டோமோ

### மந்திரி கல்வெட்டு

ஓதற்குவரிவேதம் உரைத்தற்கு மரிபோதம்
உண்மையை உணராமலே
உன்மத்தரே நீவீர்எம் மாத்திரமிங்கு
உட்புகுந் தெட்குள் நெய்யாய்
பாதிப்பாய் எங்கட்கு வேதிப்ப தாகவே
பதிதரின் வேதமோதி
பத்திசெய்திட்டுமே புத்திதான் கெட்டுமே
பாவவிமோ சனமென

### தரு

சூசையின்தேவி பெயரினை
நீசரே நீமரியாயென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசிதமாக வணங்கிய
புதுமை ஏதுவாமோ

**யோன்**

ஆசிசேர் அமலனை ஈன்றநல்
அன்னையாம் கன்னி மரியிவள்
காசினியோர் பவம்போக்கிடக்
காரண மதாமே

**தளபதி**

பெற்றவள் தன்னைஓர் கன்னியாய்
பேதமைஆகநீர் ஓதுநீர்
கற்பனைஅல்லது வேறொரு
காரணமதாமோ

**விக்ரர்**

மண்ணுடன் விண்ணைமை யாமுனம்
மாபரன் தன்னுளந் தன்னிலே
பெண்ணாயோர் தேவமலரதே
புஸ்பித்ததே காணும்

**மந்திரி**

தீதினைச் செய்தபின் தானதை
ஓதியே ஒப்பனை பண்ணிட
வாதுடன் ஓது கிறாயடா
வாய்க் கொழுப்பதாக

**தளபதி மந்திரி சந்தத்தாழிசை**

தடையிடு மார்க்க மதிடைவிடாதேநீர்
தான்தொழு மாயமென்ன
தாயெனவேயொரு சேயனை ஈன்றவள்
தன்னையோர் கன்னியென்ன

**மந்திரி**

திடமுடனே தொழுதேற்றுநீர் போற்றுநீர்
தீயரே ஞாயமின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவினிலே விட்டிது சனந்தாக் கியே
துரத்திடுவோம் அறிவீர்

**அடித்து துரத்தல்**
**அப்போது அங்கு வந்த**
**யோசவ் வாஸ், பேதுரு,யோன்விக்ரர்**

என்ன உமக்குற்றதென நீரும்இங்கு
ஏது நடந்த தித்தீது தொடர்ந்ததும்
ஏதெனவே நானறியக் கூறும்

**பேதுரு**

சத்தியவேதத்தவர் நாமிங்கு தேவ
பக்தியுடன் செபம்பற்றி நிற்கும்போது
பாதகர்கள் ஏதம் விளைத்தனரே

**யோன்**

கோவில்மணி தானடிக்கும்போது தாயை
கும்பிட்டோம் அப்போது வம்பிட்டவர்வந்து
கம்பிட்டெமைத் துன்புறுத் தினாரே

**விக்ரர்**

துடிக்களமைஅடித்து வதைத்தனரே அந்தோ
தூயமரியெனும் தாயை வணங்கிய
சேயரெமைக் காயமுறத்தானே

**யோசவ் வாஸ் தரு**

சுடச்சுடரும் பொன்னெனவே உம்மைவரும்
தொல்லைகளில் நின்றுவல்ல பரனென்றும்
தூக்கியுமைக் காக்க வருவாரே

**வசனம்**

மகனே தன்னிமித்தம்இடர்படுவோரை இறைவன் என்றும் கைவிடமாட்டார். துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேறுதலடைவார்கள். கவலைகொள்ள வேண்டாம். மகனே உன்பெயரென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மீனவன் வசனம்

என் பெயர் பேதுரு

### யோசவ் வாஸ் ஆசிரியம்

பேதுரு வென்னும் ஓதுயர்வுடைய
பூமானே இத்தின மிரவுன்
புறங்கடைதனிலே உறங்கிட எமக்கு
புகலிடம் அருளுதல் வேண்டும்
தீதறஉந்தன் திண்ணையில் ஓர்பால்
தெரிவுசெய் தருளுவை யானால்
துஞ்சியே சிறிது விஞ்சியவேளை
தோத்திரம் செய்வதற்காக

### வசனம்

ஐயா பேதுருவென்னும் பெருமானே நாங்களும் தங்கள் சமயத்தில் பற்றுடைய யாசகர்கள். இரவு வேளைகளில் தலைசாய்ப்பதற்காக தங்கள் திண்ணையில் இடம்தந்து ஆதரவருள வேண்டுகிறோம் ஐயா.

### பேதுரு ஆசிரியம்

ஆதரவருள ஆவலதானேன்
அடிகளே என் தரும் மனையில்
அங்கொரு இடத்தில் எங்குமக்கிதமோ
அதையுமக்கே அளித்திடுவேன்
சோதரரே நீர்துஞ்சுதல் செய்ய
சுதந்தரித்திடத் தடையில்லை
துய்யனே இதுமெய் ஐயமேஇல்லை
துணிவுடன் வருகுவீர் ஐயா

### வசனம்

ஐயா! இல்லிடமற்றவருக்கு இல்லிடம் கொடுப்பது எமது மறையின் முறை எனவே என் வீட்டில் தங்க உங்களுக்கு இடந்தருவேன் என்னுடன் வருவீர்களாக.

### யுவாம் யாசகம் செய்தல்

அருமைசேர் சோதரரே
அப்பரே அம்மையரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமமே செய்குவீரே
தாசர்க்கு யேசுபேரால் - அருமை

இட்டுண்டார் கெட்டதில்லை
ஈயாதார் வாழ்ந்ததில்லை
மட்டில்லா ஏகசுதன்
மாமரி சூசைபேரால் - அருமை

**கொச்சகம்**

அச்சம் புகழ் கண்ணோட்டம்
ஆர்வம் கைமாறு கருதல்
இச்செயலைத் தவிர்ப்பீரே
இரப்போர்தம்மைப் புரப்பீரே
மெச்சும் தயவுதாட்சணியம்
மேன்மைமனத் தூய்மையுடனே

**தரு**

பாத்திரம் பார்த்திட்டுண்மின்
பசித்தாரைக் கேட்டிட்டுண்மின்
சாத்திரம் சொல்வதுண்மை
தப்பாதுசேரும் நன்மை

**கொச்சகம்**

தினையத் தனையே செய்தருமம்
தீதில்லாதே ஆதரவாய்
பனையத் தனைய வாயுயர்ந்து
பாரினிற் பயன்தருமே
வினையத் தனைய வேயதற்கு
விண்ணிற் பலாபலன்களுண்டே

தரு

அள்ளிக் கொடுங்களையா
செல்வக் கரங்களாலே
ஆறுதல் செய்வீர்பின்பு
தேறுதல் நீரடைவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தரு

வறியவர்க் கீவதுவே
வையத்தில் நல்லறமாம்
குறியெதிர் கொண்டு செய்தல்
கூடாது கேடதாகும்

### வேதகலாபனை செய்யும் தளபதி மந்திரி
### தளபதிதரு

இராகம்: நாதநாமக்கிரியை தாளம்: ரூபகம்

அடித்து நொருக்கி இடித்துவிழுத்தி
ஆலயமதைத் தாலமீதிலே
பொடித்து களதுபடுத்திட இப்போ
புகலுவோமே நாமிகலுடன்

### மந்திரி தரு

கொந்தளி ஆமார் கூருறுயம்பர்
கொடு மடுத்தலும் நெடுமதில்
சந்துடைக்கும் சம்மட்டியுங் கொண்டு
தாக்கிடச் செல்வோம் சீக்கிரம்

### தளபதி தரு

ஆலயமதைத் தாலம் வீழ்த்தியே
அகட விகடமாகவே
ஏலவே செயலாக வேண்டுவ
திப்போதே செய்வோம் தப்பாதே

### மந்திரி வசனம்

தளபதி, அதோ நமது படைவீரர்கள் கட்டளைக்கு காத்திருக்கிறார்கள். மாதாகோவிலையும் பாடசாலையையும் இடித்து தரைமட்டமாக்க கட்டளை இடுவீராக.

### யுவாம்ஜயம் பெற்று வந்து
### வசனம்

அடிகளாரே அடியேன் ஐயம் பெற்று வந்த உணவில் சிறிதளவு எடுத்து அருந்துவீராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யோசவ் வாஸ் அகவல்

வேண்டிய உணவில்லாத
வேளையிலே விரோசனந்தான்
காண்பதினாலே மிக்க
கவலைகொள் அபலை நானும்
ஈண்டுணவை வெறுத்து
உபவாசம் செய்யலானேன்
ஆண்டவன் அருள்வார் நீசற்
றருந்துவீர் வருந்திடாதே

### வசனம்

இறைவா இரட்சியம் யுவாம் வேளாவேளைக்கு உண்டுறங்காத அசௌகரியங்களால் வேதனைப்படுறேன். நமக்கு இந்த வீட்டில் தலைசாய்க்க இடந்தந்த பேதுரு குடும்பத்துக்கு நாம் பாரமாக இருக்கக்கூடாது. எனவே நான் உணவை வெறுத்து உபவாசம் செய்யச்சித்தமானேன். நீர் என்னைத் தொந்தரவு செய்யாது உண்டுறங்குவீராக.

### யோசவ் வாஸுக்கு வயிற்றோட்டம் காரணமாக யுவாம் பேதுரு அன்னம்மா உரையாடல்

இராகம்: புன்னாகவராளி தாளம் : திரிபுடை

ஏதுநாம் செய்வோமிது போதிலேஇந்த
ஏதையே படுமிக வாதையே
தொற்றுநோய் இவருக்கு உற்றதோ மிக்க
வேதனை இறைவனின் சோதனை

### பேதுரு

அடுத்தவர் நம்மேற்பழி தொடுக்குமுன் இந்த
ஆளையே அழைத்திந்த வேளையே
விடுத்துமே வேறோரிடம் தடுத்துமே விட்டு
வருகுவோம் விரைவினிற் புரிகுவோம்

### அன்னம்மா

தஞ்சமென்றடைந்த இப்பஞ்சயர் தம்மை
வஞ்சநோய் வாட்டுவதால் என்செய்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமதம் செய்யாமலிப்போதிலே இவர்
தம்மையே அனுப்புதல் நன்மையே

### பேதுரு விருத்தம்

வேண்டிய உணவில்லாத வேளையில் விரோசனந்தான்
காண்பதினாலேமிக்க கவலைகொள் அபலைதன்னை
தாண்டியிவ்விடம் விட்டேகச்சாற்றியே ஏற்றிடச்செய்
தீண்டிய காட்டில்விட்டு இதுசணம் வருவோம் வாரீர்

### வசனம்

தம்பி எங்களை மன்னிக்கவும். உமக்குத் தொற்றுநோயென்று ஊரில் பேசிக்கொள்ளுகிறார்கள். ஆதலால் அயலவர்களின் பாதுகாப்பைக்கருதி உம்மை வேறிடம் சேர்த்து விடுவோம் வருவீராக

### யோசவ் வாஸை காட்டில்விட்டு வருகிறார்கள்

### யோசவ் வாஸ் தவம் செய்யும் காட்டில் விறகுவெட்டும் பொன்னம்மா

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

பட்டமரங்களைப் பரசினால் வெட்டிப்
பக்குவமாகவே கட்டி
தொட்டெடுத்துச் சும்மாடுமேல் வைத்து
தொடர்ந்து நடந்திடுவேனே

வெட்டிய விறகினைக் கட்டியேகொண்டு
வீடடைவே னிதோசென்று
வெய்யினிலே மிகவே சுறலாலே
வேகமாய்ப் போகவேவேணும்

பாவலனாம் செகராசசிங்கன்தன்
பாட்டினை மீட்டி நடந்தால்
ஆவலதாகுமே அதன்அடி தொடைகள்
அணிகளும் கணீர் கணீரெனவே

கட்டிய கட்டினைவிட்டுமே விறகு
களருதே உளருதே இப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்டிதை இங்கு இறக்கியேகட்டி
எடுத்து மேல ஏகுவேன் நானும்

## காட்டில் யோசவ் வாஸ் யுவாம்

### தரு

இராகம் : கீதவாணி தாளம்: அடதாளசாப்பு

காராயோ எங்கள்துயர் தீராயோ

**யோசவ் வாஸ்**

முன்நாள் மோசேசெனும் மோனமுனிவனை
மூர்க்கமதாகவே நோக்குமிஸ் றேலர்க்கு
மன்னாவெனும் உணவுண்ணக் கொடுத்தவா
மாபரனே இங்குதாபரந் தந்தெமை - காராயோ

**யுவாம்**

குன்றினில்நின்று நீர்கொப்பளிக்க வன்று
கூறினீர் மோசேக்குக்கோல் கொண்டடியென்று
இன்றிந்த ஏழைகட்கேதும் வக்கில்லையோ
ஏகனே எங்களைச் சாகவிடாதருள்

**யோசவ் வாஸ்**

நாற்பது நாளுணவுந் தண்ணீருமின்றி
நாதனேசோகுதன் சோதனையை வென்றீர்
காப்பமைவில்லா இக்கானகந் தன்னிலே
காருமென்றேயருள் கோருமெமை வந்து

**யுவாம்**

தொற்றுந் தொழுநோயால் பத்துப்பேருக்கன்று
தூய்மைப்படவென்று வாய்மை அளித்தவா
பற்றுனை அன்றியே மற்றறியாத இப்
பாவிகட் குந்தனின் தாவினையேதந்து - காராயோ

## துறவிகளைக்கண்ட பொன்னம்மா

### விருத்தம்

ஆரோ நீவீர் துறவிகளே
அடர்ந்த காட்டின் நடுவினிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரோ உணவோ இல்லாமல்
நெடிய முழந்தாட் படியிட்டு
கோருமுங்கள் தவமென்ன
குறிக்குமுங்கள் செபமென்ன
கூறும் நீங்கள் யாரென்று
குறித்து நானும் அறிதற்கு

**வசனம்**

துறவிகளே அன்ன ஆகாரமில்லாமல் இந்தக் காட்டின் நடுவினிலே வந்திருப்பதன் காரணம் நான் அறியும்படி கூறுவீராக.

**யோசவ் வாஸ் யுவாம் பொன்னம்மா**

**தரு**

இராகம்: லாவணி — தாளம்: ஏகம்

அன்புநிறை சோதரியே கேளும் உந்தன்
அருமுக தரிசனம் பெறுமறுசனமே
ஆனதுபோல் தோணுதே இப்போதே

**யுவாம்தரு**

உண்ணஉணவின்றி யிந்தக்காட்டில் எமக்
குறுதுணைஇன்றியே உடல்நலங் குன்றியே
உய்க்கமிக மயக்க மடைந்தோமே

**பொன்னம்மா தரு**

அந்தோ பரிதாபமிந்தவேளை உமக்
கரும்பசிஆற்றியே உறுதுந்துயர் தேற்றியே
ஆவன செய்வேனறி குவீரே

**யோசவ் வாஸ் தரு**

கன்னிமரி அன்னை தயவாலே உந்தன்
கருத்தினிலறமதை இருத்தியே திருப்திசெய்
காரணத்தை நேரினிற் கண்டேனே

**பொன்னம்மா**

சீரியரே நும்தமது வேதம்இப்போ
செப்புமொழிதனை ஒப்புடன் கேட்டுமே
சித்தமது மெத்த மகிழ்வானேன்



பொது நூலகம் யாழ்ப்பாணம்.
155308
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யுவாம் வசனம்

அம்மா இங்குள்ள மக்கள் குருக்களில்லாமல் தேவதிரவிய அனுமானங்களைப் பெறமுடியாமல் இருப்பதை அறிந்த யோசவ் வாஸ் அடிகள் இங்கு சமயத் தொண்டு செய்யவே வந்திருக்கிறார். நான் இவருடைய சீஷன். வயிற்றோட்ட காரணமாக பேதுருவும் அன்னம்மாவும் எங்களை இவ்விடம் விட்டுச் சென்றார்கள் அறிவீராக.

### பொன்னம்மா வசனம்

கோடிவணக்கம் குருக்களே தங்களைக் கண்டதும் யான் மட்டில்லா மகிழ்ச்சி கொண்டேன். நானும் ஒரு கத்தோலிக்க பெண்தான். இதோ நான் சென்று தங்களுக்குத் தேவையான உணவும் மருந்தும் கொண்டு வருகிறேன். தாங்கள் இலைமறைகாய் போலிருக்கும் எமது மக்களுக்கு ஞானக்கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென்று வேண்டுகிறேன்

### ஒற்றன் கொடுத்த கடிதம் மந்திரி வாசித்தல்
### மந்திரி ஆசிரியம்

பாரினை ஆளும் பதிலதிபதியே
பகரும் என்வாசகங் கேளும்
பக்தர்கள் தயவுமெத்திய துறவோர்
பகரருமிருவர் நம்பதியில்
சீரிய வழியைவிட்டுமே தமது
தெய்வத்தை வழிபடச்செய்ய
தினந்தினம் மக்கள் மனந்தடுமாறச்
செப்பிடும் போதனையாலே
காரியமாற்றிக் கனசனர்தங்கள்
கருத்தினை உறுத்திடச் செய்தே
கடமையைவிட்டு மடமையைத் தொட்டுக்
கர்த்தனென்றே மரிசுதனை
நேரியனென்றும் நிர்மலனென்றும்
நிச்சயம் அவர்மனம் பற்ற
நிகழ்த்திய செய்தி வழுத்தினேன் அறிவீர்
நின்சரண் என்தலைக் கணிந்தே

### வசனம்

மகாகனந்தங்கிய தேசாதிபதியவர்களே போத்துக்கேயர் நம்பதியில் ஊடுருவத் தொடங்கி விட்டனர் போலும். ஆண்டிவேடத்தில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவர் நம்மதத்தை பொய்யென்றும் கத்தோலிக்க மதத்தை மெய் என்றும் போதிப்பதாக அறிந்து ஓடோடி வந்தேன் துரையே.

## வான்றீட் கல்வெட்டு

சாற்றிடு வார்த்தையை ஏற்றிடக் கேட்டபின்
    தரிக்குதேயில்லை மனது
    சதிகாரர் வந்தேயெம் பதிகாரரிடம் சென்று
    தகராறு பண்ணவாச்சோ
ஆற்றுதேயில்லை எம்அரசை அவமதித்திட்டார்
    ஆகாத காலமவர்க்கு
    அறியாமல் வந்தேயென் பொறிமீதில் வீழ்ந்துமே
    அகப்பட்டார் மிகப்பட்டாரே
தூற்றி யெம்மறையை ஏமாற்றியே மக்களைத்
    தோற்றிடச் செய்யலாமோ
    தொல்லைகள் தனைச்செய்த புல்லர்கள்தமைக்கட்டி
    தொல்சிறையில் இட்டுவதைப்பேன்
ஏற்றுண்ணவந்தவர் இடர்பண்ண ஆச்சுதோ
    ஏற்றிப் பின்பற்றியவரை
    இரத்தாறு பாய்ந்தோடத் தெருத்தோறும் விட்டடித்
    தென்வீரம் காட்டிவைப்பேன்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

## சிந்து

    இப்படித்தான் செப்பினார்களோ என்னிறைமைக்குள்
    இப்படித்தான் செப்பினார்களோ
எப்படியும் தப்பவிடேன் எத்தர்கள் தமைப்பிடித்து
இட்டுத்தளையதே தொட்டுத் தரைதனைப்
பட்டுத் தழுவிட விட்டடித்தேயிதோ
கட்டுக்கடங்கியே மட்டுப்படஅவர்
இட்டுத்தொழவே என்சட்டப்படியேதான்
குட்டித்தலையினைப் பிட்டுப்பிடரினை
செட்டுத்தனங்கெட நட்டனைசெய்குவேன்
    ஈன்றவளைக் கன்னியென்றும் ஏகனிற்புதல்வியென்றும்
    சான்றுபலவும் பகர்ந்தேசாற்றியவர்க்குப் போதித்தார்
பொட்டுப் பொட்டாயுடல் பட்டுத்தழும்புற
சொட்டக்குருதியே விட்டுக்கசையடி
அட்டயனத்தினால்ச் சுட்டுப்பொசுக்கியும்
தெட்டத்தெளிவுற நட்டணை செய்குவேன்



6932 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவி**

வெளவாலார் தின்றது வாயாலே வாயால்
வருவதென இவர்களது வாய்க் கொழுப்பை
செவ்வையுடன் படிப்பனையே செய்துவைக்க
சேவகரை வேவுதனிற் தொடர்ந்துசென்று
கவ்வையுடன் அறிந்துவந்து களறுதற்கு
கட்டளை களிட்டிடச் செய்தேயிப்போது
ஒளவிய நெஞ்சத்தாரை அடக்குதற்கு
ஆவனவே செய்வதற்கு ஏவுவேனே

**பொன்னம்மா கஞ்சி கொண்டு போதல்**

இராகம்: மலையாமி தாளம்: ரூபகம்

எடுத்துச் செல்வேனே கஞ்சிக்கலம்
எடுத்துச் செல்வேனே

எடுத்துச் செல்லுவேன் அடுத்துப்பலதினம்
ஏதும் உணவின்றிச் சாதல்தானும்மின்றி
தொடுத்துச் செபமாலைசொல்லித் துதித்திடும்
தூயவற்குக் கஞ்சி நேயமதாகவே - எடுத்து

குற்றுயிராய்ச் செபம்பற்றித் தொழுதிடும்
கோதறுதேசிகர்க் காதாரமாகவே
உற்றுப் பசிதீர்த்திடல் நலங்காத்திட
உன்னத மாமரிஅன்னை தயவுடன் - எடுத்து

அன்புநிறைந்தவர் தென்பு பெறவென்று
ஆற்றியகஞ்சியை ஊற்றிமருந்துடன்
மண்கலையத்தினை என்தலையில்வைத்து
மாதவர்கள் செபம் ஓதுமிடந்தேடி - எடுத்து

**சுகமடைந்தபின் யோசவ் வாஸ் காடுவிட்டு ஊர்வந்து போதித்தல்**

அன்புள்ள நேயர்களே ஆருயிர் சோதரரே
பண்புள்ள மாந்தர்களே பகருமென் வார்த்தைகெண்மின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பெற்றோர் அதமெவை புரிபவம்
வன்பற்றே அழியவெனவரு
பொன்பெற்ற உலகிலிருந்தேயிம்
மண்பற்றி மகிமைதுறந்துமே

அரனருள் சுதனவர் அனைஎன வருமரு
கனிமரி யவளுடை கருவினி லுருவென
நரனென வவனொரு நடுநிசி யதனிலே
திருவுரு வாகவே ஜெனனம தாகினார்

துகிலை உரிந்தெடுத்தார்
தூயமுகத் தறைந்தார்
நகைசெய்தே முள்முடியை
நாதன் தலைக்கழுத்தி
அகிலம் போற்றிடும் அரசே நீ யெமை
ஆளுவாயென ஆர்ப்பரித்தாரே

கட்டுண்டு நின்றாரன்று
காறி உமிழக் கண்டார்
குட்டிண்டு நின்றாரன்று
குருசில் அறைந்து கொன்றார்
குறித்தே மூன்றுநாள் மரித்தோரிடத்தில்நின்
றுயிர்த்தே எங்களுக்குயிரளித்தாரே – அன்

## வான்றீட் ஒற்றர்கள் யோசவ் வாஸை பிடிக்க முனைதல்

இராகம்: ஆசிரி தாளம்: சாப்பு

**அதைஅறிந்த பேதுரு அன்னம்மா பொன்னம்மா**

சதியொன்று நடக்குது அதிதீவிரமாக ஐயனே இந்தப்
பதிவிட்டு வேறொருவதிவிடம் தேடுவீர்மெய்யனே

**அன்னம்மா**

சல்லடைபோட்டுமே புல்லர்களும்மைப் பிடித்துமே இப்போ
கொல்லநினைக்கிறார் மெல்லஇவ்விடம் விட்டுச்செல்லுவீர்

**பொன்னம்மா**

எல்லையைவிட்டிந்த எல்லிற்கரந்திங்கிருந்துமே வரும்
அல்லினில் யாரும் அறியாமுன் வேறிடம்செல்லுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பேதுரு

கடல்சுடர் வீழக் கடுநடையாகவே செல்லுவீர் சென்று
நடுநிசிக்குள்ளாக நாடுவீர்சில்லாலை கூடுவீர்

### அன்னம்மா வசனம்

அன்பின் தலைவரே, நீங்களிந்த யோசவ் வாஸ் சுவாமியாரையும் சீடரையும் இரவோடிரவாக அழைத்துக்கொண்டு சில்லாலை என்னும் சிற்றூரிலே பாதுகாப்பாக விட்டுவாருங்கள். விரைவாக நாங்களும் அங்குவருவோம்.

### பேதுரு யோசவ் வாஸ் யுவாம்
### சில்லாலை நோக்கிப்புறப்படல்

இன்று யாழ்ப்பாணம் இருந்து சில்லாலையை
ஏற்றிடச் செல்வோம் இருந்துபண்
பாற்றிடச் செல்வோம்

### யுவாம்

ஆதிபன்வேதம் அருகிடச் செய்யவே
அன்னீத ஒல்லாந்தர் பின்னிதமாகவே
சேதிமந்தன்னைச் சிதைத்துத் தகர்த்துமே
சேயரைச் சித்திரவாதைப் படுத்தியும்

### பேதுரு

உந்தஜந்துசந்தி ஓட்டுமடத்தடி
ஓதாறுகால் மடத்தோடனைக் கோட்டையும்
கொந்தலர் கூழாவடி மானிப்பாயுடன்
குட்டைவழியாற் பின்கட்டுடை சென்றுமே

### யோசவ் வாஸ்

எந்தனைப்பிடித்து நிந்தனைபண்ணிட
எண்ணினரென்றந்தப் புண்ணியர் செய்தியை
மண்ணினிற் கேட்டதால் மாற்றிடம் ஏற்றிட
திண்ணமாய்ச் சில்லாலை தேடிநாமிப்போது

### பேதுரு

சண்டிலிப்பாய்க்கு நாம்சென்று தொட்டிலடி
தாண்டிப் பிராம்பத்தைசாரும் பண்டத்தரிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பென்றிந்த ஊர்கடந்தே குவோம் சில்லாலை
ஈசனருள் சுதன்யேசுபதம் போற்றி

### பேதுரு வசனம்

அருட்செல்வரே இதோ சில்லாலை வந்து சேர்ந்துள்ளோம். இந்த வீட்டைத் தங்களுக்கேற்றபடி தயார்செய்து கொள்ளலாம். தங்களுக்கு வேண்டிய மற்றக் காரியங்களை நான் கவனித்துக் கொள்ளுவேன்.

### சில்லாலையில் ஓர் அறையில் யோசவ் வாஸ்
### தேவரம்

பண்டுனைச் சிலுவை தன்னில்
பாவிகள் அறைந்துகொல்ல
அன்றவர் தமக்காயுந்தன்
அத்தனை வேண்டிநின்றீர்
இன்றிவண் ஏழைக்குற்ற
இடர்தவிர்த் தாளுமையா
குன்றினில் மரித்துயிர்த்த
கோமானே யேசுநாதா

### வசனம்

சர்வதயாபரசத்ய சொரூபா வெவ்வினை தவிர்திவ்வேளையை காரும்.

### யோசவ் வாஸின் இடைவிடாத செபத்தையும் ஏற்ற யேசுபாலன் யோசவ் வாஸுக்கு தரிசனையாதல்

### யேசுபாலன் வரவு சபைகவி

பற்றியநினைவுக் கெட்டாப்பரமனின் திருச்சுதனார்
பாவவிமோசன மாய்ப்பாரினிலு ரைத்தபோதம்
பற்றியயோசவ் வாஸ்தன்பாவமும் பணிப்பும்கேட்க
பற்றியிப்பாரில் வந்தார் பாலகயேசுவாக

ஒளியும்நானே விழியும்நானே உன்னதங்களின்
வழியும்நானே வாழ்வும்நானே வார்த்தையும் நானே

பக்தன் யோசவ்வாஸ் செபம்நித்தம் கேட்டதால்
பரத்திலிருந் திகத்திலுற்ற பாலயேசுநான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வசனம்

மகனே யோசவ்வாஸ், மகனே யோசவ் வாஸ் உன் கண்களைத் திறந்துபார்
நானே உலகின் ஒளி

### செபத்தில் பரவசமடைந்திருந்த யோசவ் வாஸ்
### கண் விழித்தல்
### யோசவ் வாஸ் வசனகவி

அனைத்துலகும் அனைத்துயிரும்
ஆக்கிக்காக்கும்
அத்தனருள் நித்யதிருச்
சுதனே பாலா
உனைத் துதிசெய்யும் அடியேன்
தன்னைக் காண
உவந்து தரிசனமெனக்குத்
தந்ததாலே

### தரு

இராகம்: இந்துஸ்தான் பியாகு தாளம்: அடதாளம்

ஆகாஆகா என்னஆனந்ததம் ஆனந்தம்
யேசுபாலா எந்தன்
ஆகங்கனிந்தேனே சோகந்தணிந்தேனே
யேசுபாலா

### வசன கவி

மோட்சமுடி ஆட்சிகொண்ட
முதல்வனான
மூவரொன்றே ஆனதிருச்
சுதனேபாலா
மாட்சிதரும் மகிமைதனைத்
துறத்தேயிந்த
மண்ணுலகில் எந்தனுக்குக்
காட்சி தந்தீர்

### தரு

கண்ணைத் தந்தாயிந்த மண்ணிற் புனிதமாய்
யேசுபாலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைக்கண்டதன்றி உறுப்பயன்வேறுண்டோ
யேசுபாலா

### யேசுபாலன் தரு

நீத்தோய்புகழ் பூத்தாய்மறை
காத்தாய் அருள்சேர்த்தாய்
நின்பால் நினதன்பால் வந்தேன்
நித்தியவாழ்வு தந்தேன்

### யோசவ் வாஸ் தரு

கண்கள்தவம் என்செய்ததோ
காசினியின்மீதே
விண்கள்தொழும் மேலோய்நானும்
நிந்தன் முகங்காண

### யேசுபாலன் தரு

காயமதில் ஆனதவம்
ஆனதிலும் மோன
தூயமனத் தோர்மிகுந்த
பாக்யவான் களாமே

### யோசவ் வாஸ் தரு

அன்றும் இன்றும் என்றுமுள்ள
ஆதிபரன் பாலா
என்றுமுந்தன் பாதமலர்
இறைஞ்சினோமே மேலாய்

### யேசுபாலன் பரத்தேகல்

இராகம்: பெலகிரி தாளம்: அடதாளசாப்பு

அந்தமில்லா எந்தையுடை
அரியசித்தம் புரியவைத்து
ஆக்கவே இந்தப் பார்க்குள்ளே

அனுப்பிய பணிப்பைஏற்று
ஆவதுஅவர் சித்தம்போல்
ஆக்கியேபரம் நோக்கியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டுங்கள் திறக்குமென்ற
தத்துவத்தில் மெத்தவுயர்
தாசனாம் யோசவ்வாஸனாம்

இட்டவரம் திட்டமுடன்
ஈந்தேஅன்பு வாய்ந்தேஇதம்
ஆகுவேன் பரம்ஏகுவேன்

**யேசுபாலனும் யோசவ் வாஸும் சம்பாஷித்ததை சாளரத்தால் கண்ட அன்னம்மாவும் யோசவ் வாஸும்**

**அன்னம்மா தரு**

இராகம்: பியாகு தாளம்: ஆதி

உத்தமனே பத்திமிகு
நற்றவனே மெத்து நலத்தோனே நீரும்
சீருரைசெய்தது யாருடனோ எந்தன்
சேயன் செவஸ்தியனோ அன்றி வேறெவராமோ

**யோசவ்வாஸ் தரு**

அல்லவல்லப் பொன்னனைய
அன்னமெனும் மென்னடையினாளே கேளும்
அன்னவனை நானும்இன்னுங் காணவில்லை
சொன்னேனிது உண்மைநன்னயமா யறிவாயே

**அன்னம்மா தரு**

சாளரத்தால்க் கண்டசெய்தி
சாற்றுகிறேன் ஏற்று நலத்தோனே அங்கு
தாசன்நீயுந்த யேசுபாலகனும்
மாசணுகாமறை பேசியது உண்மைதானே

**யோசவ் வாஸ் தரு**

கண்டது நீ விண்டது மெய்
கண்ணனைய பெண்மணியே கேளும் அந்தக்
காரியத்தை நீயும்நேரினில் கண்டதால்
யாரிடமுமிதை நீயுரையாது காப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசனம்

மகளே அன்னம்மா, தேவபாலன் இந்த அடிமைக்கு காட்சி கொடுத்ததையும் உரையாடியதையும் நீ எவருக்கும் கூறிவிடாதே. தொடர்ந்து உன்னை ஆசீர்வதிக்குமாறு ஆண்டவரிடம் வேண்டுவேன் அறிவாயாக.

## பிரான்ஞ்சீஸ் என்னும் குடியானவன்

அந்தோ என்னவிந்தைதானே அந்த
ஆயர் சொல்லைத் தட்டினேனே

ஒய்ந்தநாளில் வேய்ந்தவீடு பற்றி
எரிந்ததன்மை தெரிந்த துன்மை

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

தக்கார் சொல்லைத் தட்டினேனே யோசவ்
தாதாவிடம் செல்வேன் தோ

## யோசவ் வாஸைச் சந்தித்து
## கொச்சகம்

அன்பான சற்குருவே ஆயரேநின் தூயமொழி
துன்பாகத்தட்டி தொடர்ந்து அந்த ஞாயிறுநாள்
என்வீடுவேய்ந்தேன் எரிந்தெல்லாம் சாம்பலுடன்
மண்மேடாய்ப் போச்சுதே மாபாவியைப்பொறுப்பீர்

## வசனம்

மகா ஆசாரத்துக்குரிய குருவே, ஞாயிற்றுக்கிழமை ஒய்வு நாளானபடியால் அன்று வீடுவேய வேண்டாமென்று என்னைத்தடுத்தீர்கள். அதனைச் சட்டைபண்ணாமல் நான் வீடுவேய்ந்தேன். மறுகணம் எப்படியோஎன் வீடு பற்றி எரிந்துவிட்டது. ஆதலால் அடியேன் செய்த பிழையை பொறுப்பீராக.

## யோசவ் வாஸ் விருத்தம்

மாயிரு ஞாலமெல்லாம் வகுத்தொரு ஆறுநாளில்
தூயவனேழாம் நாளைத் துலங்கஆசீர்வதித்து
ஞாயிறை ஒய்வுநாளாய் நமக்களித்திட்டதனால்
வேயவேண்டாமென்று விளம்புசொல்லை தட்டிவிட்டீர்

## தரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்: காபி தாளம்: திரிபுடை

செய்தவினையின் பயன்தானுன்னை
சேர்ந்ததாலே ஆய்ந்தினிமேல்
உய்யவகை நீயறிவாய் யேசு
உத்தமனின்பதம் போற்றி

தன்னைஅண்டி முன்வருவோர் தமைத்
தள்ளிவிடார் வல்லபரன்
முன்பவத்தையும் பொறுப்பார் நீயும்
முழுமனதாய் தொழுதிடுவாய்

### பிராஞ்சீஸ் தரு

அன்புநிறை சற்குருவே உந்தன்
ஆயவுரை போலினிமேல்
சந்தமரிபாலனவர் பாதம்
தான்தொழுது வாழ்ந்திடுவேன்

### வசனம்

மிகவும் உபகாரம் குருவே. இனிமேல் நான் என்றென்றும் தங்கள் புத்திப்படியே நடந்து வருவேன். என்னை ஆசீர்வதித்தருள்வீராக

### மந்திரி ஒற்றனுடைய கடிதம் வாசித்தல்

சீர்பெறுமரசே செம்முடிச்சிரசே
தீட்டுவாசக மிதேதென்னில்
திருமறைஅருகி மரிமறைபெருகி
தீவிரமாவதை இட்டு
பார்புகழ் நினதுபதம் சமர்ப்பணமே
பண்ணினேன் பக்தன்யானின்று
பகர்குருவிருவர் நகர்புறமெல்லாம்
பரிவுடன் மரிமறைபரப்பி
ஊருளமக்கள் ஒருமுகமாக
உற்றுப் பின்பற்றினரவரை
உண்மையை அறிவீர் நன்னயமாக
ஒருதிரு முகமிதுவாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வான்றீட் சீற்றம் கல்வெட்டு

பொங்குகுளம் கடலாமோ புலியாகுமோஎலிகள்
புகல்குன்று மலையாகுமோ
பூக்கொட்டி கஞ்சமலராகுமோ புலத்தில்விழல்
புல்லுத்தான் நெல்லாகுமோ
சங்குசாலக் கிரமமாகுமோ தருவெல்லாம்
சந்தன மரமாகுமோ
சற்பாத்திரமாமோ பொற் பாத்திரங்கள்தான்
சபைஎல்லாம் அவையாகுமோ
கங்கைநதியாகுமோ பொங்குமறு நதிகள்தான்
காக்கைகள் குயிலாகுமோ
கயவர்களைப்பற்றி என்வயமதனை விளக்கிட
கனவாதைகள் புரிகுவேன்
செங்குருதி ஆறாகிப்பொங்கிட அடித்துமே
சீறியவரைப் பிடித்துச்
செருசிறையிலடைத்திட மருவுதனை தொடுத்திட
சீக்கிரம் செய் விப்பேன்

### சிந்து

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

சீச்சீ இதுஎன்ன கெறுவோ செருக்குமிஞ்சிப்
போச்சுதவ ரெண்ண மிதுவோ
மூச்சுவிடநாகமது போச்சுதே எலிகளுயிர்
ஆச்சுதோ அவர்களெண்ணம்பேச்சு மூச்சிலாதவண்ணம்
காச்சியநாரா சமதைப் பாய்ச்சியவர் காதினுள்ளே
கூச்சலிடவே உதைத்துக் காச்சினமதாய் வதைப்பேன்

பாதிரிமார்கூட்டமிந்த மாதிரியென் ஆளுகைக்குள்ளே
திரிபுசெய்து மக்கட்கே பிரிபுதான்தொடர
செப்பமனங் கொண்டாரோ அவர்மனதில்
ஒப்பிதங்கள் கண்டாரோ உவமைபல
ஓதியவரைஅடுத்து உள்ளேநுழைந்து கெடுத்திம்
மாதிரியே தீதுவிளைத்தா ரவரையேபிடித்து
சூதினை அறிவேனே அன்னவருக்கு
வேதனை புரிவேனே ஒன்றோடொன்றாய்
இல்லையினிமேலெனவே ஏதுவகை தானுளதோ
தொல்லைகளெல்லாம் விளைத்துத் தூதூவெனவே பனித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவி

சொல்லதனை முடிக்குமுன்னம் செயல்முடிக்கும்
துல்லிபமா மந்திரியே தளபதியே
வல்லநம தெல்லைதனில் வம்பர்வந்து
வழுவேதம் தனைஓதும் வாறதென்ன
வல்லியந்தன் குகைக்குள் வருடைபுகுந்த
வகையதென மிகையிதனை வழுத்தலாமே
புல்லியரின் செய்தியெல்லாம் புகலுவீரிப்
போததனை ஏதெனவே புரியத்தானே

## வசனம்

மந்திரியே தளபதியே நம் ஆளுகைக்குட்பட்ட சில்லாலையிலிருந்து எமது ஆட்சியின் கட்டளைக் கெதிராகச் சமயப் பிரசாரம் செய்யும் யோசவ் வாஸைப் பற்றிய தங்களது கருத்தைக் கூறுவீராக.

## தளபதி மந்திரி ஆலோசனை தரு

இராகம்: மோகனம் தாளம்: ரூபகம்

கட்டளைகள் தட்டிவிட்டாரே கருதித்தடை
இட்டமறை தொட்டு விட்டாரே
கட்டளைகளிட்டுத் தடைஇட்டமறை தொட்டுவிட்ட
துட்டர்களையேபிடித்து நட்டணைகள் தான்புரிவேன்

## மந்திரி

மட்டடங்காக் கோவமாகுதே மனதிற்தடை
இட்டடங்கா வேகமாகுதே தீயஅந்த
பட்டிகரையேபிடித்துக் கட்டியிழுத்தே அடித்து
பாட்டிமையையே அகற்ற மேட்டிமையதாக இப்போ

## தளபதி

சுற்றறிக்கை பெற்றிலராமோ அல்லாதுமிக்க
சூதுவாது கற்றுளராமோ மடயர்கள்
மற்றுநுனிக்கொம்பிருந்து பற்றுகொம்பையே தறித்த
கற்றறிவிலார்களிங்கு பற்றுவதோ மற்றுவேதம்

## மந்திரி

தொட்டெமது ஆளுகைக்குள்ளே தொடர்ந்துவந்து
விட்டயோசவ்வாஸ் முனிவனாம் துட்டனவனும் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்சிமைமிகுமாமன்னன் ஆட்சிபுரியும் பதிக்குள்
சூட்சிசெய்யவந்ததனால் வீட்சிசெய்யவே விரைவோம்

### அரசன் முன் வசனம்

தலைவரே தாங்கள் கட்டளை இட்டால் நாமிப்போதே சென்று நாற்றிசையும் சுற்றிவளைத்து யோசவ்வாஸையும் அவன் கூட்டத்தினரையும் அகப்படுத்திக் கொண்டு வருவோம் அறிவீராக

### வான்றீட் சந்தத விருத்தம்

என்னரும்மந்திரியே தளபதியே ஏவலரைக்கூவி
இட்டவரோடு துட்டரைத்தேடி ஏகுவீரிப்போதே
பன்னரும்யேசு பாலனின்பேரால் பக்தர்கள்புடைசூழ
பாதிரிமாரும் ஓதிவணக்கம் பண்ணிடும்போதினிலே
துன்னருங்கோவில் தன்னில்நுழைந்து துச்சமதாயவரை
சுற்றிவளைத்து தூதுவரோடவர் துணையுளபேர்களையும்
மன்னவனாணைஎன இழுத்தென் மாசபைவருவீரே
மாற்றிஎம்மறையை ஏற்றிடச்செய்ய மறுவகைபுரிவோமே

### வசனம்

ஆகட்டும் அப்படியே உத்தரவு தந்தேன். வீரருடன் சென்று அவர்களைக் கைது செய்து வருவீர்களாக.

### பேதுரு ஆசிரியம்

என்னருங்குருவே இயம்பிடும் மொழியை
ஏதென ஓதிடக் கேளும்
ஏந்தலின்ஏவல் சார்ந்த நாற்படையின்
இயைந்த ஐந்தாம் படையான
உன்னரும்உளவுப் படைஉமை அறிந்து
உறுதிசெய் திட்டதினாலே
ஒற்றர்களும்மைப் பற்றிட வருவார்
உண்மை யீதுணர்ந்து கொள்வீரே
கன்னிமைந்தன் உன்அருகினிலிருப்பார்
கார்கிளித் தோருடுப்போல
கைவிடமாட்டார் ஐயமே இல்லை
கருதுமுக் கோவிலிற்பூசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னமேசெய்வீர் மோசமே அணுகா
முழுமுதலானவன் வாஞ்சை
முற்றுமே உமக்குப் பற்றுகோலாகும்
முனிவனே இனிதிருப்பீரே

**வசனம்**

அடிகளே தாங்கள் சில்லாலையில் தங்கியிருப்பதையும் எதிர்வரும் நத்தார் தினத்தன்று மூன்று கோவிலில் பூசை வைக்க இருப்பதையும் எப்படியோ வான்றீட் அறிந்து கொண்டான்போலும். எதிர்வரும் ஆபத்துக்களை எல்லாம் துச்சமாக மதித்து தங்களது ஆன்மவாஞ்சை அதிகத் துணிவைத் தருகிறது. எதற்கும் தாங்கள் முன்னெச்சரிக்கையாக இருந்து செயல்படவேணும் குருவே.

**யோசவ் வாஸ் பரணி**

பேதுருவே ஓது நத்தார்ப் பூசைக்காக
பொதுப்பாவ சங்கீர்த்தனம் புரிய
ஆதரவாய் மக்களை இங்கழைத்து வந்து
ஆவனசெய்வாய் அன்புமாமகனே

**வசனம்**

மகனே பேதுரு கலவரமடைய வேண்டாம். எனது கடன் பணி செய்து கிடப்பதே. கடவுள் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார். நீர் சென்று நத்தார்ப் பூசைக்காக பாவசங்கீர்த்தனத்துக்கு மக்களை அனுப்பி வைப்பாயாக.

## கோவிலில் யோசவ் வாஸ்-குறம்

இராகம்: லாவணி தாளம்: ரூபகம்

நிரந்தரனே நிர்மலனே
நித்யனே சர்வேசா
பரந்த நிந்தன் கிர்பைசூர்ந்து
பாவியெனைக் காரும்

மொழியினாலே சிந்தையாலே
தெளிவிலாச் செய்கையினால்
பழிவிழைத்தோர்பவம் பொறுத்து
பரிவுதந்து காரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவனே நீவெறுத்தால்
ஆர்பொறுப்பராமோ
ஆக்கியநீ காக்கவேணும்
பாக்கியம தெமக்கு

**தளபதி மந்திரி சந்த விருத்தம்**

வேங்கைகள் போல்வய வீரரேநீவீர்
வேகமதா யேகி
வெருவியே வேதகுருவுடன் அவனின்
வேண்டிய யாவரையும்

**மந்திரி**

ஒருங்குடன் பிடித்துக்கரங்களை ஒடித்து
ஓவெனவே கதற
உதைத்துமே மிக்கவதைத்துமே இப்போ
இட்டிழுத்தே வருவீர்

**தளபதி**

கரவதுகொண்டு இரவினிலின்று
கயவரே பயமின்றி
கர்த்தனென்றே மரிபுத்திரனைநீர்
கழறுநீர் பாவிகளே

**மந்திரி**

கழல்கரம்பற்றிச் சுழல்கறங்காக
கறகறவென உருள
காவலன் சொற்போல் ஏவலரேநீர்
கட்டியிழுப்பீரே

**தளபதி**

முடியினைப்பற்றிப் படியினிலெற்றி
முற்கமதாய்த் தாக்கி
கடிமலர்க்கொன்றை முடியுடை தலைவன்
கட்டளைப்படியே நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மந்திரி

வெறிபடுமுன்னே தறிகொடுதாக்கி
வெருவி யிவர்களையே
வீரரே அடித்துச் சோரவிடுத்து
விரட்டியே பிடிப்பீரே

### அடியார்கள் பிடிபடல்

### தளபதி விருத்தம்

மாதங்கமாமெனவே ஓதங்க வலிமைமிக்க
மல்லர்காள்நானிப்போது சொல்லுநல் வார்த்தைகேளீர்
ஓதுங்கைத்தளையில் நிற்கும் உயரெட்டுப்பேரைப்பற்றி
மீதிங்கு நிற்போர்தம்மை விடுதலைசெய்குவீரே

### வசனம்

வீரரே கைதாகி நிற்கும் இவர்களில் இந்த எட்டுப்பேரையும் பிடித்துக்கொண்டு மீதமுள்ள பேர்களை விடுதலை செய்வீராக.

### மேகமொன்று நிழலிட யோசவ் வாஸும் யுவாமும் தப்பிச்செல்லல்

### தப்பிச்சென்ற யோசவ்வாசும் யுவாமும்

### தரு

இராகம்: சங்கராபரணம் • தாளம்: அடதாளசாப்பு

எந்தாயெமக்காக வந்தாய்நிழலாக
சந்தர்பமேதீரத் தாசரன்புசேர
தருவாயுனதாசீர் தயவுமிகவேசீர்
தனையன் உயிர்வாழ தாரும்ஆயுள்நீள

தருவேதமே புரிபோதமே
தமியேன் தினந் தினமோதலே
தகுஞானமே மிகுமோனமோ
தருவாய் அருள்வாயே

### அனு

தந்தருளும் உந்தனதுதாளினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யுவாம்

வெருவார் வருவாரோ விரசம் புரிவாரோ
வேதந்தனை ஓத தீதிங்கு அணுகாது
அருவாய் உருவாகி ஆதியாய் அந்தமாய்
ஒருவாய்பலவாய் உத்தமகர்த்தாவே

உளமாரவே தொழநின்றநின்
உடன்பக்தருக் கிடரின்றியே
ஏற்றே அருள்சேர்த்தே நிதம்
காத்தாள் பகம்பார்த்தே

### அணு

பக்தர்கள் யாம்நித்தம் உமைபோற்றவே

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

### வான்றீட்டின் முன் தளபதி

ஆடுஉவிலே அதிகமகிமை சேரும்
அண்ணலவன் அதிபதியே அறையக்கேளும்
தேடுதலிற் பிடித்து வந்த தீயோர்தம்மில்
தெரிவான இவர்களைநின் சமுகந்தந்தோம்
நீடுபுகழ் நிந்தனது நினைவேதென்றும்
நிகழ்வதினி நின்செயல்தான் அதுவேதென்றும்
கேடுதலின்றி அதிககிர்பை கூர்ந்து
கிளர்த்திடுவீர் உளத்தினிலே கொள்ளத்தானே

### வசனம்

மகாபிரபு, தங்களுடைய கட்டளைப்படிந் நத்தார் பூசையில் சுற்றி வளைத்து இந்த எட்டுப்பேரையும் பிடித்து வந்தோம் அறிவீராக.

### வான்றீட் ஆசிரியப் பண்

நீடுபுகழ்என் அரசின் நிம்மதி கெடுத்துமே
நெடியவாதை தொடுத்து
நின்றெந்தன் மண்ணிலே என்றென்றும்தன்மறை
நிகழ்போதனை கொடுத்து
நாடுபுகழ் எங்கள்மறை நலிவுறவகைசெய்த
நடமாடு கள்வனான
நவில்யோசவ்வாசெனும் நரசோரனை இங்கு
நான்காண முன்கொணர்வீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வசனம்

தளபதியே நமது ஒல்லாந்து தேச சட்ட திட்டங்களுக்கு மாறாக றோமன் கத்தோலிக்கமதத்தைப் பரப்பிய போத்துக்கேயருடைய கையாளான யோசவ்வாஸை என்முன் நிறுத்துவீராக

### தளபதி கொச்சகம்

தூமணிக் கிரீடந்தாங்கி தொல்புவிபுரக்குமுங்கள்
பாமணிவாயின் சொற்போற் பகரருங்கோவில்புக்கு
நாமவரைக்கைப்பற்ற நாடினோம் சூக்குமமாய்
தாமவர்தப்பிவிட்டார் தவிர்த்திடுவீர் கோவத்தை

### வசனம்

மகாதேசாதிபதியவர்களே தங்கள் திட்டப்படி மந்திரியாரும் நானும் படைகளுடன் சென்று முற்றுகை இட்டு எல்லவரையும்சிறைப்படுத்தினோம். எப்படியோ யோசவ்வாஸ் சுவாமியார் மாயமாக மறைந்துவிட்டார். கோபமடையாதிருக்க வேண்டுகிறேன்.

### வான்றீட் வசனம்

என்ன தப்பிவிட்டானா யோசவ் வாஸ். ஜாலவித்தை காட்டும் மாயக்காரனா அவன். சரிசரி உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்பமுடியுமா? பார்த்துக் கொள்ளுவேன் அவன் சாகசத்தை.

### வான்றீட் தளையில் நிற்கும் எண்மரில் முதலில் நிற்கும் பேதுருவை நோக்கி

உன்பெயரென்ன

### பேதுரு வசனம்

என் பெயர் பேதுரு

### வான்றீட் சந்தத்தாழிசை

மானமுள்ள மக்களே மதிகேடரின் சொற்களால்
மானமற்று ஞானமற்று நாதியற்று ஏதையாய்
ஈனமுற்று நீங்களிவ் விடர்படுவ தேனேயோ
எத்தர்களை விட்டுநீவீர் புத்திபூர்வமாகவே
ஞானமுள்ள எம்மறையில் நாடிவந்துசேருவீர்
ஆனபொன்மணிகளும் அணிகளும் பணிகளும்
ஏனைய வதிவிடமும் ஏவலுடன் காவலும்
நானளிப்பேன் என்மறையில் நாடிவந்துசேருவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வசனம்

பேதுருவே சகாக்களே போனது போகட்டும். இந்த யாழ்ப்பாண இராச்சியத்தில் நானிட்டதுவே சட்டம் என்பதை நீங்கள் அறிவீர்கள் எனவே நீங்கள் மனந்திரும்பி எங்கள் கல்வீன் மறையின் ஆசாரப்படி ஒழுகுவீர்களாயின் வரிசைகள் பலவும் பெறுவீர்கள் அல்லது உங்களை உயிருடன் வாழவிடமாட்டேன் முடிவைச் சொல்லுவீர்களாக

### பேதுரு சந்தத் தாழிசை

பொன்னொடு மணியுமிந்தப் பூமியும் பொருட்களும்
தன்னுயிர் பிரிந்தபின்புதா னென்ன பயனுள
மின்னெனுமிவ் வாழ்வுதானும் மேதினியில்யாதுமே
புன்னுனியின் நீரதென்னப் போகுமேவெயின்முனம்
உன்மொழியை நம்பியிந்த உலகாயதத்தைஏற்க
என்மனமிணங்கவில்லை ஏந்தலே அறிகுவீர்
கன்னிமரி அன்னைசூசை கர்த்தரவர்எம்மையே
பொன்னுலகிலே அணைப்பார் போதனைஇங்கேதினி

### வசனம்

தேசாபதிவர்களே யாம்கொண்ட கொள்கையிலிருந்து எள்ளளவும் மாறமாட்டோம். எனவே உமது எண்ணப்படி காரியத்தை நடத்துவீராக.

### வான்றீட் கோபாவேசம் கல்வெட்டு

நீரற்று நெருப்புமுன்னே வைத்தபஞ்சுதன்
நிலையுற்ற வாறுபோலும்
நெய்யற்ற விளக்கொளி தள்ளாடித் தள்ளாடி
நின்றிட்ட வாறுபோலும்
கூருற்றஎயிற்று வாய்க்கூற்றுவன் கைப்பட்ட
குற்றுயிர்ச்சேடம் போலும்
குத்தனுடை வாய்ப்பட்ட குறுமுயல்துடிதுடித்
திட்டதோர் வாறுபோலும்
நேருற்று நின்றெந்தன் நெடுமொழி தட்டிய இந்த
நீசன் பேதுருவை எந்தன்
நெடியகர வாளினால் படிமிசையே வெட்டினேன்
நீசனது ஆவிபிரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசனம்

வீரர்களே இவனது முண்டத்தை வீதியிலே போட்டு எரித்து விடுங்கள் மற்ற ஏழுபேரையும் சிறையில் வைத்து தினமும் கோட்டைக்கு கல் மண் சுமக்க வைத்து கொடியவாதைப் படுத்துவீராக.

## பேதுரு வான்றீட்டினால் வெட்டுண்டு இலங்கையில் முதல் வேதசாட்சியானான்

### கண்டி மாநகர்

### தளபதி வரவு சபை கவி

கூனைவில் வாள்யானை வேல்
குதிரை தேரோடாறதும்
ஏனைமூலம் ஏவல்கான்
இணைபகை நாடாறதும்
ஆனபடை யோடெதிர்
அடையவரைச் சாடியே
தானேபுறங்கண்ட தானைத்
தளபதியுந் தோற்றினான்

### தளபதி தரு

கொடுவரியென அடுதிறலுடையோன் கொடுவாள்கர
குன்றென உயர்கொண்ட தோளுடையோன்
கெடியர் படியில் விளக்
கேசரியசந்தா வியதெனக்கூகூ வெனமிக வாகவேயிக
கொடுபடைகளை அடுசமரினிற்
கொன்றொழித் திடஇன்று செல்லுவேன்

கண்டிநகரினை இன்றரசுசெய்யும் விமலதர்மன்
கர்த்தனின்பணி நித்தமும் புரியும்
தளவாய் விரவாய்ச் சென்று
தானையும் படைஏனயாவையும் வானௌவுயர்வாக
வேசெய்ய வல்லஅரசவையிற் புல்லஇதுதருணம்
துல்லிபமாய் நடந்துசெல்லு வேனிப்போ

### மந்திரி வரவு சபைகவி

விலங்கலடர்ந்திலங்கு கண்டிநகரை ஆளும்
விமலதர்ம சூரியனாம் வேந்தனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலங்கொள்வேசென்ற நிகழ்கின்ற வருகின்ற கால
நன்நிமித்தந் தனையுணர்ந்து நவிற்றவல்ல
பலன்கொளரன் விளங்கவல்ல அரசியற்றும்
பான்மையுடன் மேன்மைமனத் தூய்மையாக
துலங்குமதி மந்திரியும் சபையில் வந்து
தோற்றினனே போற்றிமிகத் தேற்றத்தானே

தேசிய நூலகப் பிரிவு,
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

### மந்திரி தரு

வேதவேதியர் ஓதுவார்மறை ஆனதைவெருவினை
விண்டெனப்புயங் கொண்டதளபதி விள்ளுவான்பலபல
வேற்றரசர்கள் தோற்றினார்களோ ஆற்றலில்மிக
ஏற்றம்யாவையும் வேந்தனுக்கேமிக ஆய்ந்துரைசெய்வேன்

வத்தகர் வணிகத்தினிலுறு சாதனைபிறஇறை
சொத்தினில் விதித்திட்டிடு வரிமீதினைஇடுதிறை
சேரிமீதுறு வாரியத்தினை ஓதியே யுயர்காரியத்
தினை உற்றவனுக்குரை சொற்றிடுவேனே

### விமலதர்மன் வரவு சபைகவி சந்ததாழிசை

வேந்தர்பலர்தாழ்ந்துதலை சாய்ந்துகழல் வீழ்ந்தெழ
வீரமுடன்செல்வமும் விவேகமும் விளங்கவே
ஆய்ந்தகலை வாய்ந்தபுகழ் தோய்ந்தவிறல் வேந்தனாம்
ஆரிய விமலதர்மசூரியனும் தோற்றினான்

### விமலதர்மன் தரு

இராகம்: நாதநாமக்கிரியை　　　　　　　　　　தாளம்: ஆதி

மாகத்தெழு கதிரோன் மணிக்கதிர்
நாகத்திடை தெறித்து நகரெல்லாம்
மாசைப்பிரபையே வீசத்தவிசில் உற்
சாகத்துடன் அரசாளச் செல்வேனே

ஆழகடலினிலே புயலது
மூழ்கிப்புனலை உண்டுவிம்மிப் புடைத்
தாலம்பொழிந்திடற் கடர்கல்லடர் கண்டி
ஆளக் கொலுமிசை அடர்ந்திடுவேனே
வேழம்நிறை நாடேவிளங்குமத்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தலை நாடே கண்டிமாநகர்
சூழும்வளமிலங்க ஆளும்பலம் விளங்க
ஆரியவிமலதர்ம சூரியன் நானே
மணிக்குவையின் அணிக்கொலுவிற் செல்லுவேன்

**மந்திரி தளபதி அரசனை வாழ்த்துதல் சந்தத்தாழிசை**

விண்டுநிறை கண்டியாள் விமலதர்மசூரிய
வீரனே கெம்பீரனே விளங்குமதிகாரனே
அண்டிநின் அரசிறையில் ஆனபணியானுமே
கொண்டு சிரமேற்றுளேன் நின்கொள்கையாவும்கூறவே

**தளபதி சந்தத்தாழிசை**

மண்டியிட்டடை யலர்கள்மாய முடிசாயவே
மாவலிபோல் நம்படைமகாவலிமை பெற்றுமே
திண்டிறலில் இன்றுனது சேவைதனில் ஆவலே
கொண்டுள்ளேன் நினதுகுறிக்கோளு ரைக்கவேணுமே

**மந்திரி வசனம்**

சரணமேசரணம் மகாமகோ விமலதர்மசூரிய சக்கரவர்த்திகளே தங்கள் திருவுளம் எதுவோ தங்கள் கட்டளைக்காக காத்திருக்கிறோம்.

**மந்திரி தளபதி நாட்டு வளப்பம்**

இராகம்: பலஹம்ச — தாளம்: ரூபகம்

ஊகித்திடும் அறிவுற்றவனே
உலகஅனுபவம் பெற்றவனே
நீதித்துறை பலகற்றவனே
நிகழ்த்துவாய் நம்பதிவளப்பம்
தன்னை

**மந்திரி**

சோதிச்சுடர் முடிக்காதிபனே
தொடர்மலை நாடிது அடர்மழையே
பாதிப்பிலாமலே பருவம்மூன்றும்
பாங்காய்பயிர் விளைந்தோங்குதையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசன் தளபதியை நோக்கி

தறுகணாண்மை மிக்கதளபதியே
தருகுவீர்தரியலர் புரிநிலையை
கெறுவிதமோ அன்றி உறுவிதமே
கிளத்துவாய் எந்தனின் உளத்துறவே

## தளபதி

வெற்றிப்பிரதாப விமலதர்ம
வீரசூரியரேறே விளம்பக கேண்மின்
சத்தியற்றே மாற்றார் சைனியங்கள்
தளர்வர் நம்படைகளின் கிளர்நுகண்ட

## அரசன் மந்திரியைப் பார்த்து

ஏலங்கறுவா கொக்கோ இறப்பர்
ஏற்றுமதி தன்னில் மாற்றமுண்டோ
தாலங்களில் விலைச் சந்தைக்காக
தாமதியாதீர் நல்லேமமாக

## மந்திரி தரு

எங்கும் பொருட்களை ஏற்றுவோமே
எவ்விடமு மிருந்தேற் றுவோமே
இங்கும் உள்நாட்டுவணிகர் சங்கம்
உச்சநிலை மிகமெச்சினோமே

## அரசன் தளபதியை விளித்து

துணைவலி நம்வலி மாற்றான்வலி
வினைவலி யாவையும் விளைவு கண்டே
தனைநிகரில்லாத் தளபதியே
தப்பாது அணிசெய்வாய் மெய்ப்பதாக

## தளபதி

மடையெனப் பெருபடை நடமிடுமே
மாநிதியே கண்டி ஆள்பதியே
இடையின்றி எல்லைகள் தடைவிதித்தே
எப்போதும் காப்பதில் தப்பிலையே



155308

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரசன் விருத்தம்

வர்த்தகர்கள் மெத்து நல வணிகம் யாவும்
வாகுடனே ஆவதற்கு வகையதாக
வித்தகமும் வேகமும் விவேகமும்சேர்
விருதுபெறு பெருமதிசேர் மதிவல்லோனே
தத்துவத்தில் மெத்திய சேனாதிபதியே
தலமிதனைக் காப்பதுங்கள் தலைமையாகும்
புத்தளத்தும் ஒற்றர்கள்நம் விவகாரத்தில்
புகுந்திடாது மிகுந்தபணி புரிகுவீரே

### வசனம்

முக்காலங்களுமுணர்ந்த மந்திரியே முப்படையை வழிநடத்தும் தளபதியே நால் வளமும் நிறைந்த நம் கண்டி மாநகரை வெகுஜாக்கிரதையாக கண்காணித்து வருவீராக.

### யோசவ் வாஸ் யுவாம் கண்டி நோக்கிப் புறப்படல்

சீரியரேவாரும் நேரிய நம்வழி
செப்பமதாய் நடப்போம் செபத்துடன்
ஒப்பமதாய் நடப்போம்

### யுவாம்

சீவிய ஊறணியான வரனருள்
சிந்தையிற் கொண்டுநாம் முந்தநடந்துமே
ஆவியருள அவரைநாம் வேண்டுவோம்
அத்தனவரெமை நித்தமும் காப்பாரே

### யோசவ் வாஸ்

தன்னிமித்த மிடர்தான் படுவோரைத்தன்
தந்தையிடம்வந்து சிந்தை யதாகவே
அந்தமில்லா மோட்சஆனந்தம் தந்துமே
ஆசீர்வதிப்பாரே மாசீர்பரனவர்

### யுவாம் வசனம்

பூனகரியிலிருந்து புறப்பட்டு மாந்தை மன்னாரெல்லாம் கடந்து மடுமாதா தேவாலயத்தை அண்மிவிட்டோம். தேவாலயம் சென்று தாயாரை ஆராதித்து வணங்கிவிட்டு நமது பயணத்தைத் தொடங்குவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மடுப்பதியில் யோசவ் வாஸ் யுவாம்
### கொச்சகம்

சொல்லதிலே இல்லை உந்தன்
தூயநிலை ஓதுதற்கு
எல்லதிலே சந்திரன்தான்
ஏதுபயன் தான் தருமோ
அல்லதிலே செஞ்சுடரே
அன்னை கன்னி மாமரியே

### தரு

இராகம் : பரசு — தாளம் : ஆதி

உந்தனுக்கும் இந்தவிதியோ ஓமாமரியே
உத்தமியே சத்தியத்தின் முத்திமுதலே
முந்தமாந்தை தன்னிலிருந்து முதிர்வனத்தில்
வந்ததென்ன மாயமதோ மாமரித்தாயே

### யுவாம் கொச்சகம்

நிசியதனில் சசியதனை நெடியராகு வந்தணைக்க
பசியநிலவை இழந்துபாரிருளில் மூழ்கையிலே
ஒசியவிடா தொளி ஊட்டும் உதயதாரகைத்தாயே

### தரு

வன்மன வான்றீட்டரசனால் மாமடுத்தாயே
வாதைப்பட்டு ஏதமுறும் போதிலேஉந்தன்
செஞ்சரணம் தன்னைநம்பினோம் மாமடுத்தாயே
சேயருக்கு நேயக்கரம் தாயேஅருளும்

### வசனம்

கரடி புலி வசிக்கும் கானகத்தூடே காட்சி தந்து கருணை மழை பொழியும் செபமாலைத்தாயே, எங்களையும் எங்கள் பணிகளையும் ஆசீர்வதித்தருளும் அம்மா.

## இருவரும் புத்தளம் வழியாக கண்டி நோக்கிப்புறப்படல்
### முன்தருமாதிரி

இன்றுநாமிங் கிருந்தேகியே புத்தளம்
உள்வழியாக வேமெள்ள நடந்துமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று கண்டிநகர் சேருவோமே அங்கு
சேவைபுரிய நல்லாவலதாகவே - இன்றுநா

### யுவாம் தரு

அன்றியவனை அணுவும் அசையாதென்
றாகமம்ஓதும் அருள்மொழி யின்வழி
சென்றுநாமன்று மின்றுமென்று மேயுள்ள
தேவனைவேண்டுவோம் ஆவன செய்வாரே

### யோசவ் வாஸ் தரு

நிழலருமை வெயில்நின்றறி—என்பதால்
நீடுகல்முள்ளும் நெடியபாதை சென்று
அழல்கரகடைத்த அத்தன் அவர்பொற்
கழல்தொழுதே நம்கருமம் புரியவே

### விமலதர்மனின் தளபதி

இராகம்: அம்சதொனி தாளம்: ஆதி

பரவைதனிற் திரையெழாதே யெனின்
பகருமெந்தனின் திறமை ஓதிடில்
தரைமீதெனைப் பொர எவர்தானுளர்
தரக்கன எந்தன் பிரக்கியாதியை
தரியாநிலையுடனே புரியாவருமவர்பின்
திரியாநிலையுடை என்செயலறிவாரே

முந்நீரிலே மூழுமோ தீயது
மூச்சுவிடஅரா போச்சு தெலியுயிர்
பன்நாடுள படைஎதிர் வருகினும்
பதறஅடித்தணி சிதற உடைத்துப்பின்
பருந்துசிறுபுறவைத்து துரந்து துரத்தியதாய்
விருந்து கொடுத்தவரை விரையச்செய்வேனே

### வசனம்

ஏவலனே நமது வாசல் போர்ச் சேவகரை தளபதி அழைத்ததாக சொல்லி வரும்படி செய்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...நூலகப் பிரிவு,
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

## சேவகர் தரு

கண்டிநகர்காவலன் சேனாபதியவர் எம்மை
அண்டிவரவே அழைத்தார் அங்குசெல்லுவோம்
வண்டிமிர்பூந் தண்டலைசூழ் கண்டிமாமன்னன்
சேனைக்காவலனின் ஏவல்தன்னை ஏகிஅறிவோம்

செப்புமொழிதப்பிடாமல் இப்போசெல்லுவோம்
அவர்சேதியினை ஏதெனவே ஓதஅறிவோம்

செந்தமிழின்பாவலன் செகராசசிங்கம் யாத்த
சந்தமதைப்பாடிநாமும் விந்தையாய்ச் செல்வோம்

## சேவகர் தளபதியை சந்தித்தல்
## விருத்தம்

வந்தனம்வந்தனம் தந்தோம் விமலதர்மன்
வாகுடைய தளபதியே ஆகும்சேவை
சிந்தையுடனே புரியத் திறம்பாதிங்கு
தேறுமொழி கூறுவதைச் செவிமடுக்க

முந்தஉந்தன் சமுகமது வந்துநின்றோம்
மொழியதனை விழியதெனக் கொள்ள நாமும்
கந்தமலர்ச் சிந்துசெந்தேன் வாய்திறந்து
களறிடுவீர் உளமறியக் கனிவாய்த்தானே

## வசனம்

சரணமே சரணம் கண்டிநகராள் மண்டலேஸ்வரன் விமலதர்மன் தளபதியவர்களே திடீரென எங்களை அழைத்த செய்தியாதென அறிய ஆவலுற்றோம் ஐயா.

## தளபதி தரு

செப்புமொழிதனையே செயலுடன்
ஒப்புறவே புரியும்
சேவகரேகேளும் நம்பதியில்
வேவுகாரரிருவர்

கரந்து திரிகிறாராம் அவர்களை
விரைந்து சென்றே நீரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதுசெய்து வருவீர் வெகுமதி
கை நிறையப் பெறுவீர்
காலங் கடத்தாது கடுகிநீர்
கைதுசெய்துவருவீர்
வேலைஉயர்வுடனே அதிகமாம்
வேதனமும் பெறுவீர்

**வசனம்**

மதிநுட்பம் வாய்ந்த அதி உக்கிர்ம சேவகரே நமது கண்டி மாநகரில் கட்டுக்காவல்களையும் மீறி இரண்டு பண்டாரங்கள் உளவு பார்க்க வந்திருப்பதாக செய்தி கிடைத்திருக்கிறது. எனவே நீங்கள் நாற்றிசையும் சுற்றி சல்லடை போட்டுத் தேடிப்பிடித்து வந்து அரசன் முன் நிறுத்துவீராக

**சேவகர் தரு**

இராகம்: நாதநாமக்கிரியை — தாளம்: ஏகம்

தேடிநடந்திடுவோம் நாமே அந்தத்
தீயவர்களைப் பிடித்துச்செல்வதற்குத் தானே

கூடியபதவி நமக்காமே மேலும்
கொடுக்கும்படியாலே நாம் குடிக்குளுயர்வாமே

பாவலனாம் செகராசிங்கம் அவன்
பாட்டினிலே காட்டுமுயர் வேட்டினிலேதங்கம்

கரந்துதிரியுமந்தப் புல்லர் தம்மைக்
கைப்பிடித்தேஇழுத்தங்கு மெய்ப்புடனே செல்வோம்

**கண்டியில் ஓரிடத்தில் யோசவ் வாஸ், யுவாம்**

**தாழிசை**

அண்டமே உறையும் அப்பாநிந்தனபி
தானமே அர்ச்சிப்பானதே
தொண்டன் யானுமுமை என்றுமேமனதாய்த்
தொழுதிட உள்ளம் வழுவற

பரத்தினிலிருந்து துன்பகத்தினைத் திறந்து
பாருமேதயை கூருமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்தநின் திருவிருந்தெனும் மருந்து
அருளுவாய் உள்ளந்தெருளுற

**வசனம்**

கிருபா சமுத்திரமாகிய கருணைக்கடவுளே கரைநாடாகிய புத்தளத்திலிருந்து கால்நடையாகப் புறப்பட்டு கண்டி மாநகர் வந்து சேர்ந்துள்ளோம். சர்வமத சுதந்திரமுள்ள இந்த நாட்டில் ஒல்லாந்தரின் கெடுபிடியால் இடம்பெயர்ந்த உமது மக்களுக்கு ஆன்ம சேவை செய்ய அனுக்கிரகம் புரிந்தருளும் சுவாமி

**சேவகர் யோசவ் வாஸைப் பிடித்தல்**

ஆருநீர் திருடரேயிங் காண்டிபோல் வேடம்பூண்டு
ஊரினிற் புகுந்தேயிங்கு உளவுசெய்திடவந்தீரோ

கோரியேயும்மை எங்கள்கொற்றவன் பிடித்துக்கொண்டு
நேரினில்வரவே சொன்னார் நில்லாதெம்முடன்வாரீரே

**வசனம்**

அடா ஆண்டிப்பயல்களே சந்தேகத்தின் பேரிலே உங்களைக் கைது செய்கிறோம். அரசர் முன்வந்து உங்கள் விபரத்தைக் கூறுவீராக

**அரசர் முன் யோசவ் வாஸ் ஆசிரியம்**

கானலும் நீராய்க் கழனியிற்பாய
களைகளும் விளை நெல்லதாகும்
கண்டிமாநகரான்* திண்டிறல் மகிபா
கழறும்என் வார்த்தையைக் கேளும்
மோனமார் முனிவர் முத்தர்களோடு
முதிர்தரு தவமுடையோரும்
முன்னணிஅறிஞர் தன்னிகரில்லா
முனைமுகத்திலும் வலுமிக்க
பாநலம் வாய்ந்த பரதநன்நாடு
பங்கினிலுள்ளது கோவைப்
பதியினிலிருந்து பரவையிலிவர்ந்து
பகரிலங்கா புரிவந்தோம்
ஏனதும்ஊரே எவரும் ஓருறவே
இனமத சுதந்திரம் பேணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனே எமையிங் கிழுத்துவந்திட்டார்
ஏதெனஉரை பகர்வீரே

### வசனம்

அண்டிவருவோரை ஆதரித்துக்காக்கும் கண்டி மாநகரான் திண்டிறல் மகிபாசரணமே சரணம் எங்களை உமது சேவகர் பிடித்து இழுத்து வந்ததன் நோக்கம் அறியவிரும்புகிறேன் அரசே.

### விமலதர்மன் கல்வெட்டு

கர்ச்சிக்குமோசிங்கம் பட்சிக்குமோ கங்கம்
களிறுதான் பிளிறுமாமோ
கார்நரலைநீரலைகள் சேர்திரைதான் கொள்ளுமோ
கருமேகந்தான் பொழியுமோ
வெற்படரும் கண்டிநகர் விமலதர்மன்பேர்கேட்டால்
விண்ணோடு மண்ணதிருமே
வீணர்வந்தென் மண்ணில்வேணவாக் கொண்டுமே
வேவுபார்த்திடவு மாச்சோ

### சிந்து

இராகம்: தோடி தாளம் : ரூபகம்

கேடிப்பயல்கள் நீவீர் கூடிப்பகைவரோடு
நாடிப்பதியி லெங்கள் நலம்பலமறிந்துமே
பாடிப்பறங்கியர்க்குப் பகரிரகசியங்கள்
பலபலபகர்ந்தனை பழிசெய்ய முனைந்தனை
பதறப்பதற உடல்சிதறச் சிதறவெட்டிக்
குதறிக்குதறிக் கொடுவதை செய்குவேனே

### யோசவ் வாஸ் தரு

இராகம்: தோடி தாளம் : ரூபகம்

பழியை நினைந்ததில்லை அழிவை முனைந்ததில்லை
பரனருள் தரும்பத்துப் பாதைதவறவில்லை
படுபாவிஎன என்னை அடுகோவமது கொண்டு
பகைக்காதீர் வதைக்காதீர் பரனருள் உனக்குண்டு
பாராளுயர் சீராளனே பரிபாலனே விரிநூலனே
பதைக்க எனைவதைக்காதுதுன் பரிவைப்புரிவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விமலதர்மன் கல்வெட்டு

தட்டியே மனுநீதி மட்டிகாளிது போது
தயக்கமே சற்றுமின்றி
தவத்துறு வேடம்பூண்ட பத்தமேமிககொண்டு
தாண்டவமாடுகின்றீர்
விட்டீரேநடுவழியைத் தொட்டீரே கெடுவழியை
வேண்டாத செயல் புரிந்தீர்
விபரீதபுத்திவரும் வினாசகாலத் தென்று
விள்ளுவார் தெள்ளுதமிழில்

### சிந்து

ஆஷாடபூதியவன் அனீதமொழி அதைஏதென
அறியாதசன்யாசி அரும்பொருளிழந்தன்னை
வேஷாதியே மிக்கவினைய மாய்ப்பேசிறாய்
வினைசெய்த பயனைநீ விரைவினில்அறிவாயே
விடக்கேபருந்தருந்தப் பெருவிருந்தேயுனைப் புரிந்தேனிதோ
விளற்பூடனே வெகுகேடனே வேண்டாதன செய்தாய்

### யோசவ் வாஸ் தரு

வேண்டாதனவென்று விளம்புறீர் துரையேநீர்
விதைத்ததை அறுப்பது வினைப்பயனதுவன்றோ
ஆண்டவனேயன்றி அவனியில் அறிவார்யார்
அறியேனிப்பழியானும் அநியாயமொழி ஏனோ
அதிகாரமமதையாலே நீஅநியாயமே அதுசெய்திடில்
அடரும்பவம் தொடருமுமை அறிவீர்துரையேநீர்

### வசனம்

மன்னர் பெருமானே நானோர் கத்தோலிக்க குருவானவன். என் பெயர் யோசவ் வாஸ். இவன் என் சீஷன். பெயர் யுவாம் சமயத்தொண்டு செய்வதே எமது கடமை. வேவுபார்க்குந் தொழில் நாமறியேன் மகிபனே.

### அரசன் ஆசிரியப்பண்

பீடுடை எந்தனின் நாடிடைபுகுந்துமே
பேடுடை செயல்புரிந்த
பித்தரை இத்தரை சித்திரவதையது
மெத்தவும் நீர்புரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேடுடை யோருட லொடுளம்வாடிட
கொடு சிறைதனில் அடைத்து
கூர்மதியுடனே கொடுவரி யெனவிறல்
கொண்டு காவல் புரிவீர்

**வசனம்**

சேவகரே இந்தப் பகல் வேடக்காரரிருவரையும் பிடித்து உண்மை நிலை அறியுமட்டும் அடித்துச் சிறையிலிட்டுக்காவல் புரிவீராக.

**சேவகர் யோசவ் வாஸ் யுவாம்**

**சேவகன் தரு**

நீறதுபூத்த நெருப்பதாக
நின்று நாமும் இன்றுமையே
கூறுபடவே அடித்து ரத்தம்
கொப்பளிக்க வைத்திடுவோம்

**யோசவ் வாஸ்**

கொப்பளிக்கவே யிரத்தம் உடல்
கூறுபடவே அடித்து
அப்பழுக்கில்லாத எமைமிக்க
ஆகடியம் செய்வது மேன்

**சேவகன்**

ஆகடியம்செய்தும் மனம் இன்னும்
ஆறுதில்லை தேறுதில்லை
ஊகமுடனே உளவுநீரும்
உற்றிருந்து பெற்றதென்ன

**யுவாம்**

உளவதென்றும் களவதென்றும் நீவீர்
ஓதுவது நீதியில்லை
அளவதில்லா நீதிபரனான
ஆண்டவனே ஈண்டறிவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

**சேவகர் கவி**

பசுவென உடையணிந்து பாய்புலிபோலே நீவீர்
உசிதமேசற்றுமின்றி உளவுசெய்திட வந்தீரே
கசிவதுசற்றுமின்றிக் கடுமனத்துடன் அடித்து
மசிசிறையினிலடைப்போம் மகிபனின் ஆணைமீது

**வசனம்**

அடே வேடதாரிகளே உண்மைநிலை வெளிப்படும்வரை உள்ளே இருப்பீராக

**சிறையில் யோசவ் வாஸ்**
**இன்னிசை**

குற்றமற்ற உன்னைஅன்று குருசினிலேதானறைந்து
கொன்றவருக்காக குறையிரந்து வேண்டினையே
மற்றிவர்செய் குற்றமதை மாபரனேநீபொறுத்து
எற்குனதுசித்தம் இரங்கிஅருள் செய்வாயே

பிரதேச நூலகப்
மாநகர நூலக
யாழ்ப்பாணம்.

**வசனம்**

சர்வதயாபர யேசுவே இவர்கள் உண்மைஅறியாமல் செய்கிறார்கள். விரைவில் இவர்கள் உண்மையை உணர்ந்து உமது இராச்சியம். வருகவென வழிநடத்த எனக்கும் கிருபைகூர்ந்தருளும் சுவாமி.

**மழையில்லாமல் குடிமக்கள் வாட்டமுறல்**

நீர்வளமின்றி நிலவளங்குன்றி
நெற்பயிர் மறுநற்பயிர்களும்
சீர்நிலைகெட ஊர்நிலைகெட
செய்வதேதுநாம் இனியிங்கு
உய்வதேதுதான்

வான்நோக்கிவாழும் வையம்மன்னவன்
கோன்நோக்கிவாழும் குடிகளென்பதால்
கோன்நிலைகெட வான்நிலைகெடும்
குடிகள்அலமர கொற்ற வனிப்படியிற் பலமரும்

மழையினைநம்பி உழுது விதைத்தோம்
மழையிலாது மண் புழுதியானதே



6932 cc

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணிற் பொழியும் விண்ணிற்றுளிதான்
மாறுபட்டதே ஊர்நிலைதான்
வேறுபட்டதே

### வசனம்

வாருங்கள் நாம் சென்று அரசனிடம் முறையிடுவோம்

### மக்கள் அரசனிடம் பிரலாபித்தல்
### விருத்தம்

நரபதியே கண்டி நகர்க்கதிபதியே
நாடுநகரெங்கனும் நன்மழையில்லாச்
பரவலதாய்க் கொடுவரட்சி உற்றதாலே
பயிர்ப்பச்சை எல்லாம் பழாச்சுதையா

புரவலனே குடிமக்கள்படுந்துயரம்
போதாமல் கால்நடைகள் பெருமளவாய்
இறந்தசெய்தியிதை உமக்கு உரைக்கவந்தோம்
ஏற்பீரே எங்களை நீர்காப்பீரையா

### வசனம்

பிரபு வணக்கம். நீர்வளம் நிறைந்த நம் கண்டி மாநகரம் மழையில்லாது வரண்டபாலைவனமாகக் காட்சி அளிக்கிறது. மாவலிகங்கையிற் தானும் குடிப்பதற்குக் கூட தண்ணீரில்லை. பயிர்பச்சை எல்லாம் எரிந்து கருகிப் போய்விட்டன. ஆடுமாடுகள் அருண்டுவிழுந்து மடிகின்றன. அரசை நம்பி வாழும் மக்களை நீங்கள்தான் காப்பாற்றவேணும் ஐயா.

### அரசன் மக்களைத் தேற்றுதல்

ஆவனசெய்வேன் நோவது வேண்டாம்
அரும்பிரசைகள்
அச்சந்தவிர்ப்பேன் நிச்சயமாக
அலமறல்வேண்டாம்

விண்ணுங்கொழிக்கும் மண்ணும்செழிக்குமே
விளைவும்மிக்குமே
விரசந்தவிர்ப்ப தரசனென்கடன்
விருப்புடன் செல்வீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வசனம்

மகாசனங்களே நாட்டின் நிலையை நான் அறிவேன். அரசதர்மங்களில் யாதும் தவறிலேன். ஏனோ எம்மைப் புத்தபகவான் சோதிக்கிறான். உங்களுக்கு வேண்டிய தானியங்களைக் களஞ்சியங்களில் பெற்றுக்கொள்ளுங்கள். மேற்கொண்டு நடக்க வேண்டியவற்றை நான் கவனத்திற் கொள்ளுவேன். சென்றுவாருங்கள்.

### அரசன் மந்திரி தளபதியை அழைத்து

### வசனம்

மந்திரியே தளபதியே தெய்வத்தின் சோதனை தான் இது நீங்கள் ஆலோசனை பண்ணி விமோசனங்காண வழிகூறுவீர்களாக

### மந்திரி தளபதி ஆலோசனை

இராகம்: கல்யாணி                                        தாளம்: அடதாளம்

சேனைத் தளபதியே கேளும்நானும்
செப்பும் மொழிதனையே நாளும்
வானமழைஇன்றி வாடுதே பயிர்
மக்களுக்கு மிகக் கேடிதே

### தளபதி தரு

புத்தம்சைவ மிசிலாமிய மத
போதகர்கள் துணை நாடினோம்
அத்தனையும் பயனற்றதே செயல்
ஆவதுயாதினி மற்றதே

### மந்திரி தரு

சிறையினில் யோசவ்வாஸாமெனும் அந்த
அந்த தேசிகர்தன் தயைநாடுவோம்
அறையும்அவர் முறைசெய்குவோம் அத்தால்
ஆகும்பலனதை எய்துவோம்

### தளபதி தரு

இப்போதே நாமங்குசெல்லுவோம் நம்ம
ஏந்தல் முன்னேயிதைச் சொல்லுவோம்
அப்போதவர்பதில் சொல்லுவார் வேத
ஆயரிடம் கூட்டிச் செல்லுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மந்திரி தளபதி அரசனின் வசனம்

இராசாதிஇராசனே வானம் வரண்டதால்நம்நாட்டின் நலன்கள்யாவும் சுருங்கிவிட்டன. அதற்குப் பிராயச்சித்தம் காணப் புத்தபிக்குகளையும் சைவக்குருக்களையும் இஸ்லாமியலெவ்வைகளையும் அழைத்து பெரும் யாகங்களையும் பூசைகளையும் செய்வித்தோம் பயனில்லைஎனவே சிறையிலிருக்கும் கத்தோலிக்க குருவான யோசவ் வாஸ் முனிவனை வேண்டிப்பிரார்த்தனை செய்விப்பதெனத் தீர்மானித்துள்ளோம்

### சிறையில் யோசவ் வாஸ்

### கொச்சகம்

சொல்லால் நினைவால்ச் செயலாலும்
தூய்மைஅற்று வாய்மைஇழந்
தல்லல்படுவோர் தங்களுக்கு
ஆன்ம போசனமளித்து
எல்லைஅற்ற பரம்பொருளை
எட்டவகையே கிட்டவழி

### தரு

இல்லையேயிப் போதினிலே ஏழைகனவினிலே
எடுத்துவைத்த நிதிகொடுத்ததில்லைக் கதி
எனவே எந்தன் நிலையே

### கொச்சகம்

அல்லலுறும் பாவப்பிணியில் அவதியுறும் மக்களுக்கு
ஆவியருள் சஞ்சீவிஎன அடையும் பச்சாத்தாபமதை
இல்லைஇதற்கென் செய்வதென
இதயங்கலங்கும் போதினிலே

### இராக வசனம்

நசையிநின் வேதம் நாற்றிசையும் போய்
நவிலுவீரென்று நன்குரைத்தனையே
வசையுடன்இந்த வன்சிறைதனிலே
வாடுமிவ்வேளை நாடினேன்உனையே

### தரு

சேற்றினிலோர் ஊன்றுகோலாக
செருவிலேஉறு கேடயமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றிலேவரும் அரும்புணையாக
ஆகுவீர் மாபரனே

**வசனம்**

இறைவா லோபியின் கைப்பொருள் போலப் பாவி என்செயல்பயனற்றுப் போகவிடாதேயும் ஆவி அருளும்சீவிய ஊறணியேபாவிகட்குப் பாவ சங்கீர்த்தனம் முதலிய திருவருட்சாதனங்களை அளிக்க இச்சிறை யிலிருந்து அடியேனை மீட்டருளும் சுவாமி.

## மந்திரி சிறையில் யோசவ் வாஸை சந்தித்தல்

**விருத்தம்**

தவத்திருமுனியே நிந்தன்சரணினை வேண்டுகின்றோம்
பவத்தினால் அபத்தமாயிப் பதியினில் மழை இல்லாது
உபத்திரப்படும் மக்கள்தம் உடலுயிர்நலங்காத்துங்கள்
நலத்தினைஅருள உம்மைநாடினோம்தேடிநாமே

**வசனம்**

மகாசங்கைக்குரிய யோசவ் வாஸ் அடிகளே உங்கள் அருமை பெருமை அறியாது உம்மைச் சிறையில் அடைத்ததற்காக முதல்முதல் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறோம் இன்று எமது கண்டிமாநகரம் மழையில்லாது எரிந்து கரிந்து பாலைவனமாய்ப் பஞ்சத்தால்ப் பரிதவிக்கிறது. ஆதலால் தாங்கள் யேசுபெருமானிடம் மழைபெய்யும்படி மன்றாடி எமது ஆட்சியை மாசுபடாது காப்பாற்றுமாறு வேண்டுகின்றோம் குருவே

## அரசன் சிறையில் யோசவ்வாஸைச் சந்தித்தல்

இராகம் : தேசியதோடி தாளம்: ரூபகம்

**தரு**

சத்தியவேதத்திலுறு சற்குருவேகேள் உங்கள்
சாந்தமறை தனைஓர்ந்திடாமலே வேந்தன்யானுமுமை
சித்திரவாதையது செய்ததனாலே நாங்கள்
செய்தபிழையினை ஐயநீபொறுத்துய்ய வகைஅருளும்

**யோசவ் வாஸ் தரு**

அன்றுதமைக்குருசில் கொன்ற பாவிகட்காய் தம்
அனாதிபிதாவினை வேண்டியவர்களுள் பூண்டயேசுபிரான்
இன்றும்பிழைபொறுப்பார் உண்மையீதறிவீர்இ∴து
ஓதுசத்திய வேதநெறிமுறை ஆகமமறிவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசன் தரு

பூசிதமாமுனியே புங்கவசரணம்இந்தப்
புல்லன்யானுனை மெல்லநாடினேன் நல்லவரமருள
மாசீர்மழைபொழிந்து மாவலிபெருகி எந்தன்
மாநிலமக்கள் மேநிலை பெறத்தானே தயைபுரிவீர்

## யோசவ் வாஸ் தரு

ஆசீர்அருளெனவே ஆசிகோரிநிற்கும் நேச
அரசனேஉந்தன் விரசமேயறமரிசுதன் பதத்தை
மாசீர்அருளவென மன்னிஅனுதினமும் யானும்
மனதுவைத்துமன்றாடு வேனறிமன்னனே உறுதி

## வசனம்

அரசபெருமானே இயற்கையின் தலைவனாகிய இறைவனின் திருவுளப் படியே எல்லாம் நடைப்பெறுகிறது அவர் மேல் பூரணநம்பிக்கை வைத்து அடியேன் வேண்டுதல் செய்ய மலைகள் அடர்ந்த முற்றவெளியில் பூசைசெய்யப் பீடமொன்று அமைத்துத்தருவீராக.

## குடிமக்கள்தரு

இராகம்: பூரிகல்யாணி தாளம் : ஏகதாளம்

செவிக்கினிய செய்திஒன்று செப்பிடக்கேட்டோம் இந்தச்
சேரியிலேதான் பொழியும்மாரி மழையாம்

புத்தமதம்வேண்டி மழைசற்றுமில்லையாம் வேறு
புனிதன்மழை பெய்யவைப்பான் புதுமையாகவாம்

புவிக்குளுயர் புண்ணியனாம் புதுமைசெய் வாராம் அவர்
செபிக்கமழை தான்பொழிந்து செழிக்குமுலகாம்

மெத்தமழைதான் பொழியவைத்திட வென்று ஒரு
மேலவனாம் வேண்டுவனாம் ஆண்டுசெல்லுவோம்

விண்ணிடித்து மின்னடித்து மேகம்கறுத்து இந்த
மண்ணில் மழைதான் பொழியப்பண்ணுவார்களாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னே நாமும்அங்குசென்றுஎன்னேஏதென்று காண
முன்னே நடந்தேஅறிவோம் பின்னிடாமலே

## யோசவ் வாஸ் சுவாமிகள் முற்ற வெளியில் மழை வருஷிப்பித்தல்

### அகவல்

மறுமறையோர்கள் முறைபல செய்தும்
மழைபெய்யவில்லை பிழையினைப் பொறுத்து
மரிதருபாலா மாசறுசீலா
பெருமழை பெய்யப் புதுமைசெய்வாயே

### தரு

கருங்கொண் மூவாய் திறந்துமின்னி
கனத்து இடிஇடித்துப்
பெருமழைதான் பொழியவேணும்
புனிதமரி சுதனே

### அகவல்

காற்றொடு கடலும் கனலொடு புனலும்
சாற்றுபல் பொருளும் சர்வமும்நீயே
போற்றுநின் அடியார் புதுமையைக்காண
புறச்சம யத்தோர்புகலநின் நாமம்

### தரு

வரப்பினில் நீருயர வேணும்
வாவிகளும் நிறையப்
பொருப்பினில் நின்றுமழை பெய்யப்
புதுமைநிகழ வேணும்

### அகவல்

அகத்திருள்நீங்கி அறிவொளி நோக்கி
சுகத்தினைக் கண்டு துதிக்க நின்நாமம்
பகத்தினைத்திறந்து பரமனின் சுதனே
மிகத்தயைகூர்ந்து மேதினி செழிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தரு

பொழிக பொழிகமழை நிந்தன்
புதுமை நிகழவினை
பயிரும் செழிக்கவேணும் இந்தப்
பாரும் களிக்க வேணும்

### விண்ணிடித்து மின்னடித்து மழைபொழிதல்
### யோசவ் வாஸ் வசனம்

ஆக்கல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழிலுக்கும் முதல்வனே இன்று இந்தஏழையின் விண்ணப்பத்தைஏற்று இந்த அற்புதத்தைப் புரிந்து நாடுமுழுவதும் நல்ல மழை பொழியவைத்து நலங்காத்த அருளாளனே என்றென்றைக்கும் உமக்குத் தோத்திரம் சுவாமி

### அரசன், யோசவ் வாஸ், மந்திரி, தளபதி
### கலிப்பா

தொனிக்கும் குரலில் ஜீவனுண்டே
தூய பரவசம் விளங்க
பணிக்கும் சொல்லிற் பதில்விளங்கும்
பரனின் அருட்கொடை விளங்க
அனைத்தின் மேலாய் அவனருளும்
அவனின் மூலம் எமக்கருளும்
நினைக்கத் தகுமோ நிந்தனது
நிலையை உலகில் எவராலும்

### அரசன் தரு

அருளுரையும் வள்ளலே நின்போலும் யானும்
அன்றுமின்றும் கண்டதில்லை மேலும்
தெருளுறவே நாமடைந்தோம் தூய்மைஇன்னும்
சேரவே எமக்கருளும் வாய்மை

### யோசவ் வாஸ் தரு

மன்னவனே மானிலத்தை ஆளும் உயர்
மாமகனே நானுரைக்கக் கேளும்
என்னை அணுகாதென்றென்றும் வாழும் அந்த
இறைமகனை நிறைவருளக் கேளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மந்திரி தரு

ஆவிக் கருமருந்து தாரும் ஐய
அடியேற்கு நின்தயவு கூறும்
சேவிக்கும் எத்தன்முகம் பாரும்நித்ய
தேவனை எங்களுக்காய்க் கோரும்

### யோசவ் வாஸ் தரு

என்னிலே எதுவும்மில்லை இன்னும்இன்னும்
இறைவன் திருவருளை உன்னும்
அன்னவன் அருளிரந்து வேண்டும்இந்த
அவனியில் அனீதத்தைத் தாண்டும்

### தளபதி தரு

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

இதய சுத்தி எமக்கு அருளும்ஐய
இறைபத்தி யோடுமனத் தெருளும்
எதையும் அறிந்துணர்ந்து மருளைநீக்க
எமக்கருள வேணும் உண்மைப் பொருளை

### அரசன் விருத்தம்

அனைத்துமொரு ஊரெனவே அறைந்தீர் அன்று
அருந்திருவே பெருங்குருவே அடியேன் யானும்
உனைத்தடை செய்திட்டதனால் ஊரில்மிக்க
உபத்திரவம் அபத்தமுடன் உள்ளதாலே
எனைத்துறை யிலும் உமக்குத் தடையேஇல்லை
எந்தவிதம் உந்தனது மறைபோதத்தை
நினைத்தபடியே பரப்ப நிச்சயித்தால்
நிந்தனுக்கு எந்தவித தடையுமில்லை

### வசனம்

மகாவந்தனைக்குரிய யோசவ் வாஸ் அடிகளே தாங்கள்செய்த அற்புதத்தால் இந்தக் கண்டி மாநகரமக்கள் கண்குளிர இந்த மாவலிக் குதூகலித்தது. அதுபோல யாமும் அகமும் முகமும் மலர்ந்தோம் தங்கள் பக்திக்கும் புனிதத்திற்கும் உவமை கூறமுடியாது. ஆதலால் முந்தமுந்த தங்களை வாழத்தி நன்றி கூறுகின்றோம் இதுவரை தங்களுக்குள்ள தடைகளை நீக்கினோம் தாங்கள் சர்வ சுதந்திரமாக எனது நாட்டில் சமயத் தொண்டாற்ற உத்தரவு தந்தோம் அவ்வப்போது தங்களுக்கு வேண்டிய உதவிகளை செய்ய எனது தூதுவர்கள் காத்திருப்பார்கள்அறிவீர்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித அந்தோனியார் திருநாள்
## யோசவ் வாஸ் திரைவிருத்தம்

விடமிட்டபதிதர்தம் அடம்விட்டு நின்பதம்
வீழ்ந்துமே வணங்க வைத்தாய்
வேந்தனின்மகள் சிரம்தான் துணித்திட்டகுழல்
விந்தையாய் ஒட்ட வைத்தாய்
நடமிட்ட சோகுதான் புடமிட் டெரிந்துதன்
திடமற்றடங்க வைத்தாய்
நட்டாற்று நீரினம் நாடிக்கரை வந்துன்
நவில்போதம் கேட்க வைத்தாய்
மடமுற்றகழுதைதான் மறுத்துத்தன் னுணவினை
மாபரன் பாதம்வேண்டி
மன்னிநற்கருணையை முன்னிமுழந்தாளிட்டு
மகிழ்ந்துமே வணங்கவைத்தாய்
அடமுற்றோர் அடிதொட்டு விடுபட்டிட உந்தன்
ஆதாரம் வேண்டி வந்தோம்
ஐயனே அரனுறையும் கையனே மெய்யனே

## அந்தோனி மாமுனிவனே
### நடசாரி

பவனியைப் பாரீர் அற்புதன்வாற
பவனியைப் பாரீர்
நவகோடிமுனியென்று நவிலும் அற்புதன்ரத்ன
நவமானரதமேறி நகர்வீதி வருகின்ற - பவனி

ஆலகாலத்தை அமிர்தமாய் உண்டவன் துஞ்சிய
அந்தணன்சேய் உயிர்பெறக் கண்டவன்
வேலைதன் மயிலைகட்கு விண்டவன் அடியவர்
வினைதீர்க்க எனஉற்சவங் கொண்டவன்
கோலமயில் நடமாடக் கோகிலங் களிசைபாட
பாலயேசு கரத்தோடு பண்புடன் எழுந்துவாற - பவனி

வித்தார மாமணி தைத்தமாலையும் விரிகதிர்
முத்தார மாமணி வைத்த வேலையும்
கொத்தார மாமலர்கொத்து கோர்வையும் தவநவ
சித்தனவர் பக்தர்க்கருள் பார்வையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திமிகு மத்தளம் தவிலுடன் சல்லாரிடக்கை
தத்தரிகிட தித்தரிகிட தாம்தாம் எனவேவாற - பவனி

## பேய்வரவு சபைகவி

அத்தனின் சொல்லைத் தட்டிஆழ்நரகழலில் வீழ்ந்து
சுத்த ஆன்மாவிழந்து சோகுவாய்மாறித்தேவ
புத்திரர் தமைக் கெடுக்க புவன மெங்கெங்கும் சுற்றும்
குத்திரம் நிறைந்தபொல்லாக் குணுங்குமிச்சபை வந்தானே

## பேய் தரு

இராகம் கல்யாணி தாளம் அடதாளம்

பூதிமீதுறை தீதின்ஆதிபன் நான் புகழேமிகு
சோதிஎனப் பெயர்ஓதினான் அரனும் - பூதி
ஆதிமாதினை வாதினிற்கனித்
தீதினைஉண்ண ஒதியேமிகு
சோதனைக் குறுவேதனைக்குள்ள
னாதியானுடன் மோதவேசெய்த

மண்ணினா லுருப்பண்ணின அந்த
அண்ணலாதாமைப் பண்ணவன்தொழப்
பண்ணவேசொன்ன அன்னவன்சொல்லை
விண்ணில்மீறிய திண்ணவன்யானே

யோகனாமந்த யோசவ்வாஸுமேல்
மோகமுறுநரர் சோகமேயுற
வேகமேமிகு சாகசமவற்
காகவே செய்குவேனிதுசனம்

## மோகினி வரவுசபை கவி

ஆசையால் அழகால் நீசஅன்பினால் இன்பமாக
தேசினால் நடித்துத் தேவர்மூவரோ டேனையோராம்
மாசறு முனிவரோடு மாதவர் யாவரையும்
மோசமேசெய்யும் மோகமோகினிசபை வந்தாளே
ஆசையால் மயங்கவைப்பேனே அறம்மறந்தென்
ஆசையில் மயங்கவைப்பேனே
ஆசறுமுனிவர்களும் அண்டர்களும் தொண்டர்களும்
தேசுறும் அரசர்களும் தேவர்மூவர் யாவரையும் - ஆசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசிதமாவேதியர்கள் புங்கவர்கள் தங்களையும்
கூசிடாதே என்னழகு கொண்டவர்களைமயக்கி - ஆசை

### பேய்சந்தத் தாழிசை

வாகினி சீராசினி சிலாசினி மாமோகினி
வானவர்க்கும் ஏனவர்க்கும் தானேநிகரானநீ
ஏகியந்த மன்னனின் தளபதி தனைவசித்
தாவதை நான்ஓதுவேன் அதுபுரிகுவாயினி
அழகினால் மயக்கியுந்தன் ஆசையை விலக்கியே
பழம்நழுவிப் பாலில்வீழ்ந்தபான்மையாக மேன்மையாய்
விளைவதனைச் சொல்லியங்கு வெற்றியினைப்புல்லியே
வேலையை முடித்திட விரைகுவாய் விரைவிலே

### வசனம்

மூவுலகங்களையும் காற்றெனக் கடந்து, மக்களை அடுத்துக்கெடுத்துப் பாவச்சேற்றில் வீழ்த்தும் அலங்காரமோகினிப்பெண்ணே இச்சணமேநீ அரசனின் தளபதியிடம் சென்று உன் கைவரிசையைக் காட்டுவாயாக

### மோகினி பேய்தரு

என்னசெய்யவேணும் ஐயனே அதை
ஏதெனவேயிப் போமெய்யனே
உன்னவேணுமதை முன்னிநான் செய்குவேன்
மன்னனின் சேனைத் தளபதிதன்னையே

### பேய்தரு

இராகம்: கல்யாணி　　　　தாளம்: அடதாளம்

அழகுக்கலையால் மயக்கியே உந்தன்
ஆசைக்கணையை இயக்கியே
பழகற்கெளிதாகப் பாசாங்குபண்ணியே
பாவக்கலையாம் வலையினில் வீழ்த்துவாய்

### மோகினி தரு

ஆனபின் என்செய்யவேணுமோ அங்கு
ஐயந்திரிபற நானுமே
ஏனதையும் நீஎளிதாய்விளக்கியே
இயம்பிடவேணும் நயம்பெறவேஇப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேய் தரு

அந்தோனி மாமுனி கோட்டமாம் அது
அன்னிய வேதத்தின் தேட்டமாம்
அந்தஇடத்தினில் இல்லாதொழித்திட
ஆனது செய்குவாய் நானதைஒப்பிட

## வசனம்

சாகசக்கலையில் கைதேர்ந்த மோனிப்பெண்ணே! யோசவ்வாஸ் முனிவனின் விடாமுயற்சியால் றோமன் கத்தோலிக்கமதம் கொடிகட்டிப் பறக்கிறது. இதற்குநாம் முற்றுப்புள்ளி வைக்கவேணும் இப்போது அந்தச் சுவாமியார் கார்வலோ சுவாமியாரிடம் பொறுப்பை ஒப்புவித்துவிட்டுக் கரையோரப்பகுதிகளுக்குச் சென்று வேதம் போதிக்கிறார். இதுவே தக்கதருணம் நீ சேனைத் தளபதியிடம் சென்று அவனை மயக்கி அந்த அந்தோனியார் கோவிலை இடித்துத் தரைமட்டமாக்க வலை வீசுவாயாக

## யோசவ் வாஸ் திருவருட் சாதனங்களை வழங்கல் மறைவொலிப்பாடல்கள்

மறைப்பணியாற்றினரே யோசவ் வாஸ்
மக்களைத் தேற்றினரே

அறத்தை மறுத்திட்ட அன்நீத ஒல்லாந்தர்
ஆகடியம் மிக்க ஆட்சியில் மீட்சியில்
சிறைப்படவாழ்கின்ற சேயற்கு நேயமாம்
சேரும்திருவருட் சாதனங்களீந்து - மறைப்

கண்டிமாநகரிற் சென்று ஆங்காங்குதன்
காயத்திலுறு நோயையும் பாராமல்
அண்டிஅரனருள் கொண்டு ஞானமுழுக்
காற்றினார் தேற்றினார் மாற்றிச்சென்மப்பணி

தாண்டவன்வெளியில் ஆண்டொருகோவிலில்
தற்பரனளித்த நற்கருணையதாம்
மாண்டதிருவிருந் தீண்டளித்துக்கன்ம
மாசகற்றினாரே ஆசறுதேசிகர்

பச்சாத்தாபமெனும் உச்சித நற்பணி
பாவவிமோசனம் ஆவதனை அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயித்தே யங்குநீர்கொழும்பு தன்னில்
நேர்த்தியுடன் செய்தார் பூர்த்தியதாகவே

நிந்தை அவமானம் வந்தபோதுமந்த
நீதத்தைத் தட்டாது ஏதத்தைப்பட்டாலும்
அந்தஉறுதியை முந்தவேகொழும்பில்
ஐயன் அருளினார் மெய்யைஉணரவே

## எதிர்பார்த்து நின்ற மோகினிப் பெண்ணைப்பார்த்து தளபதி ஆசிரியம்

ஏது நீபெண்ணே இமையவர் மயங்கும்
எழிலுடன் விழியில்மை இட்டு
இகத்தினிலில்லா அகத்தமைவுடனே
இங்குவந் துற்றதும் ஏனோ
மாது நீவேண்டுவதை எனக்கீண்டு
வழுத்திடில் உளத்தினிற் கொண்டு
வகைசெய்வேனதனை மிகையறக்கூறும்
மன்மதன் கணையினுக்கிணையே

## வசனம்

ஏ பெண்பாவாய், குன்றில் முட்டிய குருவிபோலக் கலவரங்கொண்டு இங்கு என்னைக் காணவந்ததன் நோக்கம் நானறியும்படி கூறுவாயாக

## மோகினி ஆசிரியம்

விளைவதை உணரும் தளபதியே யென்
விருப்பினிலுருப் பெறும்துரையே
வீரனே ஜெயசிங்கா ரனேநீரும்
விள்ளுமென் நல்லுரை கேளும்
களைவது களைந்து விளைவதை வியந்து
காரியமாற்றிட வேணும்
கருதியபகையை நோயினை நெருப்பை
கடிதினில் அடக்கிடவேணும்
விலக்கியதவிர்த்து விதித்தன ஓம்பி
வினையினை நினைவினிற் கொண்டு
வேகமதாக ஆகுவபுரிமின்
விடிவதும் விரைவினி லிரவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமும் போகும் காரியமாகும்
கனவது நனவதேயாக
கருதுமக் கோட்டம் உருவழித்திடுவீர்
கணத்தினிற் சுணக்கமேஇன்றி

### வசனம்

நாற்றிசைக்கும் நாற்படைக்கும் நாயகமாகிய தளபதியே! நால்வளமும் சிறந்தோங்கும் கண்டி மாநகரிலே இப்போ

### தரு

புத்தமதமே நித்தம் அருக
சித்தமதுதான் மெத்தஉருக
கத்தோலிக்கமே விர்த்தியாவதைக்
காணவேயிப் போமனம் நாணுதேமிக்க

### தளபதி தரு

இராகம் : பரசு தாளம்: அடதாளம்

காரணமெதோ நானறிகிலேன்
காரியமிதை நேரினிலேநி
வாரணங்காணவே யொருபுத்தி
களறுவாயெனில் யானும்அதை உளமுறக்கொள்ள

### மோகினி தரு

அந்தோனியெனும் அந்தமுனிவன்
ஆலயமதிற் காலை மாலையும்
முந்தவே மக்கள் வந்துகூடுறார்
மோகமாகவே மிகுமனத்
தாபமாகுமே

### தளபதி தரு

ஆகவேயங்கு போவதை நாமும்
அடுத்தவர்களைத் தடுத்திட வேணும்
வேகமாகவே ஆகுவசெய்ய வேணுமேயிப்போ
வெகுநலங் காணுமே அப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோகினி தரு

கோட்டமத னைஇடித்துமே அங்கு
கூடுமவரை நாடாது செய்யின்
கோவிலுறும் ஆராதனை கெடும்கொஞ்ச நாளிலே
அவர்மறை துஞ்சலாகுமே

## வசனம்

என் ஆசைக்குரிய மன்மதத் தளபதியே, றோமன் கத்தோலிக்க சமயத்தை மக்கள் பின்பற்றிச் செல்லுகிறார்கள். எனவே மற்ற மதங்களெல்லாம் மறைந்துவிடும் போலிருக்கிறது. எனவே யோசவ் வாஸ் சுவாமியார் இங்கு இல்லாத இச்சமயத்தைப் பயன்படுத்தி அந்த அந்தோனியார் கோவிலை இடித்து விட இதுவே தருணம் போய்வருகிறேன் அடிக்கடி இங்கு வருவேன். அறிகுவீராக.

## பிரிகிறார்கள்

## தளபதி விருத்தம்

கந்தமலர் சிந்துநறவுண் டளிகள்
கானமுடன் வானமுறக் களித்துநிற்கும்
சுந்தரஞ்சேர் கண்டிநகர்த் தோன்றலார்தம்
தூதுரைக்கும் கட்டியனேசெப்பக் கேளீர்
செந்தமிழ்ப் பாவாணர் செகராசசிங்கம்
செப்புகவி தப்பிலாது பாடிக்கொண்டு
இந்தஅரசின் தயைசேர் சேவகோரை
இதுசணமே அழைத்திங்கு வருகுவீரே

## வசனம்

கேளுங்கட்டியனே சேவகரை தளபதி அழைத்ததாகச் சொல்லிவரும்படி செய்குவாயே

## கட்டியன் வசனம்

அப்படியே ஆகட்டும் ஐயா

## சேவகர் வரவுசபை கவி

ஆகவே வேண்டியதை எல்லாம்
அரசின் ஐங்குழுவினுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகசமாகச் சென்று
சாற்றுசொல் செயலதாக்கும்
வேகமும் விவேகமும் சேர்
வீரகெம்பீரரான
சேவகர் சபையில் வந்து
தோற்றினர் தோற்றினாரே

## சேவகர் தரு

சேவகர்கள் நாமேசேவை செய்குவோமே
செப்புமொழி தப்பிடாமல் ஒப்புடனேதானே

சோரர்களைப் பிடிப்போம் சுகங்கெடவே அடிப்போம்
வீரர்கள் எம்போலுலகில் வேறுளரே யாரும்

காரியத்தில் வீரன்கருதும் மதிசூரன்
களத்தினிலே யாம்பொருது
விளைத்திடுவோம்தீரம்

காற்றினை எதிர்ப்போம் கூற்றினை எதிர்ப்போம்
கஞ்சாவுடன் கள்ளபினிவிஞ்ச உண்போம்தானே

## சேவகர் தளபதி சந்தித்தல்
## தளபதி கவி

வாட்டமே இன்றி என்றும்
வழுத்திடும் செய்தி தன்னை
கேட்டதும் கிளர்ந்தெ ழுந்து
கிர்த்தியம் செய்து வீரம்
காட்டிடும் சேவ கோரே
கழறு மந்தோனி என்னும்
கோட்டமே இடித்துவீழ்த்திக்
குதித்திங்கு வருகுவீரே

## வசனம்

அதிஅற்புத சத்திவாய்ந்த அசகாயசூரர்களே, நீங்கள் சென்று யோசவ்வாஸ் முனிவன் கட்டிய அந்தோனியார் கோவிலை இடித்து வீழ்த்திவிட்டு வருவீர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சேவகர் வசனம்

அப்படியே ஆகட்டும் துரையே

### சேவகர் தரு

ஏகியேநாமந்த ஏகாதிபத்திய
ஏந்தல்தளபதியின் சொற்போலே
ஆகுங்கருமம் அதைமுடித்துப்பின்பு
ஆடிப்பாடி வருவோம் அன்பாக

கூட்டத்தை உதைத்துக் கோட்டத்தை சிதைத்து
வாட்ட சாட்டமாகவே தளபதி
கேட்டதை முடித்தார்ப் பாட்டமுடனங்கு
குதித்து நடந்திடுவோம் மதிக்க

எதிர்ப்படுவோர் தொல்லை ஏதும் நமக்கில்லை
ஏற்படினும் அவரை இன்றுநம்
காற்படுபந்து போல்த் தூக்கிஎறிந்து நம்
காரியத்தை முடிப்போம் நொடிக்குள்

காரியம் பெரிதோ வீரியம் பெரிதோ
பாரியதே நமதுபணிகள்
சேதிமந்தன்னை இடித்துப் பின்னேயங்கு
செல்லுவோம் வல்லமையைச் சொல்லவே

### கோவிலை இடித்ததை அறிந்த பேயும் மோகினியும் ஆரவாரம்

அட்டசயமிலகு சூட்சுமமுடனே
அரும்பிரகாசம் பொருந்துமிமை
மெச்சுநலமிகுமிச் செயலேநம்
போலவர்க்கேயிது சாலவுள

### மோகினி தரு

அரனயனுடனே அரியையுமுடனே
ஆக்கிரமிப்பேன் ஆர்க்குமஞ்சேன்
திறனெனக்குண்டு தேவதை என்போல்
தேவருலகினில் யாருமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பேய் தரு

நினைத்தது எதுவோ முடித்திடு வேனே
நிச்சயமிது என்பரிச்சயமே
அனைத்துலகும் கண்இமைத்திடுமுன்னே
ஆகுவன செய்சோகுவும் நானே

### மோகினி தரு

பொது நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

திருமகளழகை உருவழித்திடவே
திருவுருவெடுத்த பெருமையுடன்
பரமனைமயக்க உருவெடுத்திட்ட
பாக்கியமே சிலாக்கியமே

## கோவிலை இடித்த சாபத்தால் மக்கள் நோய்பிணிகளால் வாதைப்பட்டு யோசவ்வாஸிடம் முறையிடல்

### உலா

அந்தோ தவத்திருவே ஆன்மமருத்துவரே
வந்தோம் உமதுதயை வாய்மைபெற
சந்தாபம் தீர்த்திடுவாய் தாசரைக் காத்திடுவாய்
உந்துநோய் உக்கிரத்தைத் தணிப்பாய்

போர்புரிசேவகர்கள் புனித அந்தோனிமுனி
சேத்திரத்தை இடித்துச் சிலைகளையும்
பார்த்தே உடைத்தார்கள் பாவம் பலுகியதால்
பதியினிலே மக்கள் பரிதவிக்க

வைசூரி நோயினாலே வாடித் தவிக்கிறார்கள்
கைமருந்தே இல்லைக்கன தவத்தோய்
செய்செபத்தாலே உமதுசேயரைக் காத்திடுவீர்
உய்யவகை எங்களுக்கு உவந்தளிப்பாய்

### வசனம்

மகாவந்தனைக்குரிய குருவே அன்பும் தயையும் பிறசிநேகமுமுள்ள சுவாமிகளே எங்கள் கண்டி மாநகரிலே வைசூரியென்னும் கொடிய நோய் புயல்போலப் பரவி மக்களை கொன்று குவிக்கிறது. எங்கள் மன்னனும் இதற்குப்பயந்து வேறெங்கோ சென்று வாழ்கிறார் இவைஎல்லா புனித அந்தோனியார் கோவிலை உடைத்ததால் ஏற்பட்ட தேவசாபமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் பேசிக்கொள்கிறார்கள் குருவே தாங்கள் கருணை கூர்ந்து தேவகோபந்தணியப் பிரார்த்திக்க வேணுமென்று மண்டியிட்டு மன்றாடுகிறோம் குருவே

### யோசவ் வாஸ் வெண்பா

இறந்துபல நாட்களின்பின் எழுந்திருக்க லாசறுவை
அறைந்திரக்கம பூண்டஅற்புதனே - மறந்த
பாவிகள் மனந்திரும்பப் பண்ணியிந்த மண்ணிலே
ஆவியவர்கட்கே அருள்

### வசனம்

இறைவா இதுவும் உன்சோதனையா. நோயாளிகளுக்கு நிறைந்த சுகங்கொடுத்து நிர்மலா நினது நாமத்தின்மகிமையால் இவர்களுக்கு ஆன்மசரீர ஔடதம் அடைய அருள்பாலிப்பாயாக

### யோசவ்வாஸ் யுவாம் தரு

பாரச் சிலுவையிலே அன்றுபாவமன்னிப்பருள
ஆருயிரை ஈந்தனையே ஆதிபரன் சுதனே
அடியேமுக்குன் நீதியருள் நிதனே

### யுவாம் தரு

கேளுங்கிடைக்கு மென்றீர்பின்னும் தட்டும்திறக்குமென்றீர்
தேடுமெமை வாட விடாதாளும் பரம்பொருளே
அரும்பவத்தால் மீளும்வரமருளே

### யோசவ் வாஸ் தரு

வைசூரி நோயினாலே வெகுவாக வாதைப்படுமிவரை
நையவிடாதைய காரும்நாடினோம் உன்தயவை
நரதேவனே தேடினோம் ஈந்தருளே

### யுவாம் வசனம்

அடிகளாரே மாட்சிமை தங்கிய மன்னன் அரண்மனைக்கு வந்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது எனவே தாங்கள் சென்று நமது பேராலயம் தகர்க்கப்பட்டதன் தாற்பரியத்தை அறிந்து வருவது நல்லதென நினைக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோசவ் வாஸ் அரசனிடம் போகிறார்

இராகம் :கல்யாணி                    தாளம் :அடதாளம்

### தரு

அரசன் அவையை நாடுவேன்
அதிசுறுக்காய் - அரசன்
அரசன் அவையை நாடிஆசார சீலனாய்
தெரிசித்தவனை எந்தன்சேதி தனைச்சொல்லி
விரசமதா யெந்தன் வேதகோவிலைத்தாக்கி
தரைமட்டமாக்கிய தாற்பரியமறிய - அரசன்

பரிசனர்களைக் கூட்டிப் பகலிரவாயங்கு
கரிசனையாகவே கல்மண்தனைச் சேர்த்து
மரிசுதனை ஏந்தும் மாமுனி கோவிலை
பிரியமாய் அமைத்துள்ளோம் பேதையர் அழித்திட்டார்

### அரண்மனையில் யோசவ் வாஸ் அரசன் முன்

### வெண்பா

முறைசெய் தரசியற்றும் முன்னவனே மன்னவனே
நிறைகோல் கோடாத நிருபா - அறையும்
அடியேன் சொல்லைக் கேட்டு ஆவனசெய்யும்
படியுன்னை வேண்டுகிறேன் பார்

### அரசன் ஆசிரியம்

ஆரணமுதலாம் அரணருள்சேவை
அதுபுரிமது மலர்பாத
ஐயனேஉமது மெய்யதுவாட
அரசனென் அவைதனைநாட
காரணமெது வோகழறிட வேணும்
கடிதினில் விடையது காணும்
கயவர்களெவரும் வயமதுகொண்டு
கனபழிசெய் தனராமோ
மாரணமவரை மறுகணந்தனிலே
மண்மிசை திண்ணமேபுரிய
மாவீரர்தம்மை ஏவிடுவேனே
மாதவநீ சலியாதீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணமாய் நிவாரண மருள்வேன்
புகலுவீர் நிகழ்வதை எல்லாம்
பொன்னவிர் போதாநின்னது செய்தியிப்
போதினில் ஏதெனத்தானே

### யோசவ்வாஸ் ஆசிரியம்

ஏதெனவினவும் ஏந்தலேகேளும்
இயம்புவேன் நின்நகர்தனிலே
இடரதுநிகழாதிட அரனெனையே
ஏவினன் ஆவியினாலே
தூதெனைஅனுப்பி வாததுபுரிநின்
துயரினை அயர்வுறச்செய்ய
செபத்தினால் அதிக அபத்தமேஇன்றி
தொடர்மழை வருஷிப்பித்தேனே
ஆதவன்தன்னை அணிகொள்ளுந்தேவி
அவளருள் சுதனைச் செங்கரத்தில்
அணைத்துமே இருக்கும் அருந்தவமுனிவன்
அந்தோனி அவனுறை கோவில்
அதனையே இடித்து அருங்குருசுடைத்து
அணிகலைச் சிலைகளைச் சிதைத்தார்
அண்ணலே இந்தஉண்மையை அறிந்து
ஆவன செய்குவீரையா

### வசனம்

கமலமலர்ப்பதம் சரணம் விமலதர்மசூரிய இராஸ்சேஸ்வரா எங்கள் பேராலயமாகிய புனித அந்தோனியார் கோவிலை ஏன் இடித்தீர்கள் எதற்காக தரைமட்டமாக்கினீர்கள் என்பதனை அடியேன் அறியலாமா துரையே

### அரசன் ஆசிரியம்

வலிதுவலிதே யிதுபுலியினை வாலாட்டவோ
வல்லாண்மை மிகக்காட்டவோ
வயமதுகொண்டிட்டாரோ ஜெயமதுகண்டிட்டாரோ
வாதோதூ தூயீதென்ன
கலியது காலந்தானோ கயவர்கள் மாயந்தானோ
கண்டிநகராள் மாமன்னன்
கட்டளை இல்லாமலே இட்டுரை செய்யாமலே
காரியமாற்ற வாச்சோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலியிடுமாகோவிலை வலிதிலிடித்திட்டுமே
பகைமோசம் பண்ணவாச்சோ
பண்ணவன்வந்தென்னிடம் விண்ணப்பம் செய்தது
பாவமோ சாபந்தானோ
நலியவிடாதிப்போது வலிவுடைய சபைகூட்டி
நடுநிலைதப்பிய பதர்களை
நையப்புடைத்து வதைசெய்யத் தடுத்துவைத்
தையந்தனைக் களைகுவேன்

### சிந்து

தப்பிதங்கள் எப்படிச்செய்தார்
தருக்கர் செருக்காய் - தப்பித
தப்பிதங்கள் செய்தவரை ஒப்பிதமதாய்ப்பிடித்து
மெய்ப்பொடிபட அடித்துச்செப்பரும்சிறைஅடைத்து
உப்புடன் அசனமும்பின் கைப்புறுங் கஞ்சலமுண்ண
வைப்பேனிதுவே என்எண்ணம் தப்பிடாதுதானென்திண்ணம்
அத்திர சத்திரங்களால்
வைத்துவத்திரம் செய்விப்பேன்
இத்தரையிலே எவரும்
மெத்தவியப் புற்றிடத்தான்
மற்கடந்தனக்கு முன்னே வைத்தமலர்க்
கொத்துநிலை எத்தகையதோ - அத்தகையதாய்
ஈனருக்கு நானளித்த தானபலமானது கொண்
டானையது மண்ணைஅள்ளித்தானே தலைக் கிட்டதன்ன
கூனைவில்லின் நாணறுத்து கெட்டநரி
தானதன்நிலை அறியாத ஊனர்களும்
சேத்திரத்தைத் தானிடித்துச் சேர்சிலைகளைப்பொடித்து
தோத்திரத்தைத்தான் கெடுத்தநாத்திகர்கள் சீர்த்தியற
ஏனதன்முன்னே வைத்ததானநவமான முத்தை
தானது இடறிமிதித் தீனமதுதான்புரியும்
ஓமமதுதான் வளர்த்தாலும் கழுதையைவைத்
தாமதுகுதிரை ஆகுமோ பயனதில்லாக்
கானகத் தெளித்தநிலாகார் கடலிற்பெய்தமழை
ஆனதன் நிலையை ஒத்ததான பயனற்றதுவே
சேனைதனைக் குறியாரோ அவதென்திறல்
ஆனதினை அறியாரோ தீயர்களெந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானமதை வங்கமேற்றத் தானவரும்எண்ணினரோ
மோனமுனிவர்க்குரியதான கோவிலைஇடித்து - தப்பி

## சந்தத் தாழிசை

என்னருங் குருக்களே நீர்ஏகுவீர் நின்மாமனை
பன்னருங் கோவிலிற் பதட்டஞ்செய்த பேர்களை
மன்னனென்ன வராகிலும் மற்றுமெவராகிலும்
சொன்னது செயலதாகத் தொல்சிறையில் வாட்டுவேன்

## வசனம்

குருக்களே ஏதே தவறு நடந்துவிட்டது நடந்தவற்றிற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன். தரைமட்டமாக்கப்பட்ட கோவிலை முன்னை யிலும் மேலாக புதிதாக அமைத்துத்தரக் கட்டளை இடுகிறேன் அதேவேளை கோவிலை இடித்த சூத்திரதாரிகளைக் கண்டறிந்து கடுந் தண்டனைக்குள்ளாக்குவேன் அறிவீராக.

## யோசவ்வாஸ் சந்தத்தாழிசை

பல்லது நாவிற்றைத்தால்ப் பகைத்ததை உனப்பதோ
பல்சுவையை நாவினுக்குப் பல்லதுவும் நல்குமே
அல்லதுசெய்தோரை அரசுபொறுத்தல் ஆகுமே
ஆண்டவன் அரசினுக்கு வேண்டுவதை நல்குவான்
அல்லினிலே சந்திரனுக்காங்கறை தானுண்டுமே
எல்லினிலே எல்லதை இருங்கொண்மூமறைப்பதும்
நெல்லினுக்குமியுமுண்டு நீர்க்குநுரைதானுண்டே
புல்லிதழ்பூவுக்குண்டு பொறுத்தருள்புரிகுவீர்

## வசனம்

இராசேஸ்வரா குற்றம்பாற்கிற்சுற்றமில்லை எனக்குநீர் கோவில் கட்டடித்தரமுன் வந்ததே என் பாக்கியம் அதன்றிக் கோவிலை இடித்த வர்களைத் தண்டிப்பதுஎனது நோக்கமன்று எனவே அவர்களையேசு பெருமான்பேரால் மன்னித்து ஆகவேண்டிய முன்னேற்றங்களைச் செய்வீராக

## யோசவ் வாஸ் உலா

காலம்போம் வார்த்தைநிற்கும் கர்த்தனுரைத்தமொழி
சீலந்தவறாது சேவைசெய்வாய் ஏலவே



155308

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டவினையைத் தொடருவேனோ அறியேன்
விட்டவினையைத் தொடர்வீர்விண்ணரசின் மட்டட்டங்கா
கட்டளைகள் பத்தையும் காசினியோருக்குணர்த்தி
தொட்டுச்செயல்புரிவாய் தூய்மையுடன் இட்டமதாய்
கோவையிலிருந்து வந்த குருக்களுடனே நீயும்
ஆவன செய்வாய் அருஞ்சீஷா

### யுவாம் வசனத் தரு

ஐயனே எனக்கு அரும்பொருளுணர்த்தி
ஆவனசெய்யச் சேவகனாக்கி
அகப்பகைஅறுத்துப் புறப்பகை வெறுத்து
ஆனநின்னுரையால் தேனது சொரிந்தீர்

### தரு

ஆவிதனக் காம்மருந்தே என்றும்
சேவித்து நிந்தனது சேவடியைமறவேன்
சிந்தைதனிலே என்றும்எந்தாய் உனைநினைந்து
சேவைசெய்வேன் பாவிநானும்

### வசனத் தரு

உய்வகை தன்னை உளத்தினிற்பதிய
ஓதிடவோ நின்போதனை தன்னை
வைசூரிஎன்னும் வாதையால் நீயும்
வருந்திடலாமோ அருந்தவத் தோனே

### யுவாம் தரு

காயமிதுபொய்யே என்றும்
தேயும்பிறையதென்றும் செப்பினீர் ஒப்பிதமாய்
மாயுங்காலமிதென்று நீயும் உரைக்கலாமோ இதுபொழுது
மாதவனே ஓதலாமோ

### வந்தனைக்குரிய யோசவ் வாஸ் இறைபதமடைதல்
### மக்கள் பிரலாபம்

விதியே உந்தன் சதியிதுவோ
விண்ணரசின் எண்ணமிதுவோ அந்தோ
கதியிழந்திப் பதியின் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கலங்க வைத்தனையேபாவி
கூற்றேயுந்தன் ஆற்றல்தானோ
கொள்கையுனக் கெள்ளளவும் உண்டோ துயர்
ஆற்றவந்த தேசிகனின்
ஆவிகொடுபோயினையே பாவி

அறமேயுந்தன் திறனிதுவோ
ஆவதுசெய் சேவகனைஈண்டு
மறம்விளைத்து மடியவைத்தாய்
மாளாயோ நீதாளாயே வீழாயோ

பழியே உனக்கழிவில்லையோ
பாமரரை மேலரசிற்சேர்க்க
பாரதத்திருந்து வந்த தேவ
பக்தனில் வைத்தாயே உந்தன்விழியை

## விருத்தம்

மங்களம் மங்களம் யேசுமரிசூசைக்கும்
மாதவனந் தோனிமுனி செவஸ்தியாற்கும்
சங்கைசெறிபாப்பு மேற்றிராணிமார்க்கும்
சற்குருக்கள் கன்னியர் சன்ஞாசியற்கும்
இங்கிதமாய் யோசவ்வாஸ் நாடகத்தை
இயற்றியவர் பயிற்றியவர் பார்ப்போர் கேட்போர்
துங்கமுடன் படித்தபேர் நடித்தபேர்க்கும்
தூயபரன்பதம் பணிந்து சாற்றினேனே

6932 CC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு
CENTRE FOR PERFORMING ARTS
திருமறைக்கலாமன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

published by;
THIRUMARAI KALAMANRAM
JAFFNA , SRILANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org